Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 12 வியாழக்கிழமை (28.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 275

## இடம்பெயர்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால்

# வன்னி அகதிகளுக்கு உதவுவதில்

# ஐ.நா. பெரும் நிதி நெருக்கடியில்

## உதவும் நாடுகளிடம் அவசர கோரிக்கை

கொழும்பு, ஓகஸ்ட் 28

**போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கில் - வன்னியில் - இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாலும்- அவர்களுக்குத் தேவையான அவசர மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கும் ஏனைய உதவி வழங்கும் அமைப்புகளுக்கும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.**

**அதனைத் தொடர்ந்து ஐ.நாவும் இதர உதவி வழங்கும் அமைப்புகளும் நிதி உதவி வழங்கும் நாடுகளிடம் மேலதிக உதவிகளைத் தருமாறு நேற்று அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளன.**

ஐக்கிய நாடுகள் சபையின் முகவர்களும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அங்கம் வகிக்கும் நிலையியல் குழு (IASC) வன்னி அகதிகளுக்கான அவசர உதவி மற்றும் பாதுகாப்பான வாழ்விட உதவிகளைச் செய்வதற்கு 145 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என்று முன்னர் - இவ்வருட ஆரம்பத்தில் - மதிப்பிட்டிருந்தன.

ஆனால், அங்கு இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கை ஏற்கனவே அதிகரித்திருப்பதாலும் போர் மேலும் தீவிரமடையும் போது மென்மேலும் அதிகரிக்கலாம் என்பதாலும் உடனடித் தேவை 190 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயரும் என இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வருட மத்தியில் நாம் மேற்கொண்ட உத்தேச செலவீன மதிப்பீட்டின் போது மேலதிக உதவிகள் தேவைப்படும் என உணரப்பட்டது. வடக்கின் மனிதாபிமான உதவிகளுக்கானதேவை அதிகரித்துள்ளமையும் உணவுப் பொருள்களின்விலைகள் உயர்ந்துள்ளதுமே அதற்கான பிரதான காரணிகள் ஆகும் - என்று ஐக்கிய நாடுகள் சபையின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் ஞாயிறும் நல்லூர் பி.செ. பிரிவில் ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூர் கந்தன் ஆலய பெருந்திருவிழாவையொட்டி இன்று இரவும் எதிர்வரும் 31 ஆம் திகதி இரவும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைக்கான கப்பல் சேவை; இன்றும் வழமைபோல்

யாழ்ப்பாணம், ஓக. 28

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை வழமைபோல் இன்று இடம்பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

பயணம் செய்வதற்கு பதிவு செய்த

(12 ஆம் புக்கம் பார்க்க)

## மன்னார் ஆயர் அனுப்பிவைத்த கூரைவிரிப்புகளுக்குத் தடை

வவுனியா, ஓக.28

படைநடைவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து மரநிழல்களின் கீழும், பொது இடங்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காயில் கிளைமோர் ஒருவர் பலி; மூவர் காயம்

வவுனியா, ஓக.28

துணுக்காய், புத்துவெட்டுவானில் படையினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் அப்பாவி பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மூவர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் நடத்திய விமானத் தாக்குதலில் உணவு விடுதி மீது வீழ்ந்தன குண்டுகள்

### 6 படையினர் பலி; 24 பேர் காயம்

கொழும்பு, ஓக. 28

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானம் திருகோணமலை கடற்படைத் துறைமுகம் மீது நேற்று முன்தினம் இரவு நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் ஆறு கடற்படையினர் உயிரிழந்தனர் என்றும், 24 துருப்பினர் வரை படுகாயமடைந்தனர் என்றும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

புலிகளின் விமானங்கள் வீசிய இரு குண்டுகள் கடற்படையினரின் உணவு விடுதி மீது வீழ்ந்தன. அவற்றில் ஒன்று மட்டுமே வெடித்தது. மற்றைய குண்டை பின்னர், இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் வெடிக்க வைத்தனர் என்று கூறப்பட்டது.

நேற்றுமுன்தினம் முன்னிரவு 9.15 மணியளவில் கடலுக்கு மேலாக தாழப்பறந்து வந்த புலிகளின் விமானம் கடற்படைத் துறைமுகப் பகுதியை அண்மித்ததும் திடீரென சற்று உயரப்பறந்து இரு குண்டுகளை வீசியதாகவும் - குண்டு வெடித்த சத்தத்தால் துறைமுகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகள் அதிர்ந்தன என்றும் தகவல்கள் வெளியா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர் தாக்கியதும் தப்பிச் செல்கையிலேயே விடுதலைப் புலிகள் விமானம் குண்டுகளை வீசியது

### திருமலைச் சம்பவம் குறித்து இப்படிச் சொல்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஓக.28

கடற்படையினரின் தாக்குதலை அடுத்து தப்பிச் செல்லும் போதே புலிகளின் விமானம் இரு குண்டுகளை வீசிவிட்டுச் சென்றது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை இரவு திருகோணமலை கடற்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய விமானத்தாக்குதல் குறித்து நேற்று விவரித்த போது இவ்வாறு கூறினார்.

அந்தச் சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் கூறியதாவது:-

திருகோணமலை கடற்படைத்தளம் மீது விடுதலைப்புலிகளின் விமானம் ஒரு முறையே தாக்குதல் நடத்தியது. அதன் போது குறித்த விமானத்தில் இருந்து இரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடாவில் கிபிர் தாக்குதல்

வவுனியா, ஓக.28

முழங்காவில், நாச்சிக்குடா பகுதிமீது நேற்றுக்காலை 9.30 மணியளவில் விமானப்படையினரின் 'ஜெற்' விமானங்கள் தாக் குதலை நடத்தின.

நாச்சிக்குடாவில் இருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க் நிலைகள் மீதே தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## "ராடரில்" கண்டு தாக்கிய போதிலும் விமானம் குண்டுகளை வீசிவிட்டுத் தப்பியது எவ்வாறு?

### கொழும்பிலிருந்து சென்ற விசேட குழுக்கள் நேற்று ஆராய்வு

கொழும்பு, ஓக.28

திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு விடுதலைப் புலிகளின் விமானம் வருவதற்கு மூன்று நிமிடங்களுக்கு முன் னர் 'ராடர்' கருவிகளில் கண்டுபிடிக்கப்பட்டது.

அவ்வாறிருந்த போதிலும் விமானம் வந்து எப்படி தாக்குதலை நடத்தியது என்பதைக் கண்டறிய விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு சென்ற இரு விசேட குழுக்கள் இது தொடர்பாக ஆராய்ந்துள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலங்குளம் நோக்கிய முன்நகர்வை முறியடித்ததாக புலிகள் அறிவிப்பு

வவுனியா,ஓக.28

துணுக்காய், ஆலங்குளம் பகுதியை நோக் கிய ஸ்ரீலங்காப் படையினரின் முன்நகர்வு தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக் கப்பட்டுள்ளது.

உயிலங்குளம் பகுதியிலிருந்து ஆலங்குளம் நோக்கி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் படை யினர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ். ஆஸ்பத்திரி ஞானவைரவர் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற கும்பாபிஷேகத்தின் காட்சிகள் இவை. (படங்கள்: லக்ஸ்மன்)

# மறவன்புலோ வடக்கு வயல்களில் காலபோக நெற்செய்கைக்கு அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், ஓக. 28

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ வடக்குப் பகுதி நெல் வயல்களில் இவ்வருடம் காலபோக நெற்செய்கை மேற் கொள்ள அனுமதிக்கக் கோரி நெற் செய்கையாளர்கள் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் உள்ள ரயில் பாதைக்கு தெற்குப்புறமாக கடந்த 2004-2005 காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நெல்வயல்களில் இவ்வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்குமாறு நெல்வயல் உரிமையாளர்கள் தென்மராட்சி பிரதேச செயலர் ஊடாக யாழ். அரச அதிபரைக் கடந்த ஏப்ரல் மாதம் கோரியிருந்தனர்.

ரயில் பாதைக்கு வடக்குப் புறமாக நெற்செய்கைக்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் பாதுகாப்பு காரணங்களுக்காக தெற்குப் புற வயல்களில்இவ்வருடம் காலபோக நெற் செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இந்த வயல்களில் இவ்வருடம் காலபோக நெற் செய்கை மேற் கொள்ள ஆயத்த நிலையில் இருந்த வயல் களின் சொந்தக்காரர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

## சோனக தெருவில் விளையாட்டுப்போட்டி

சோனக தெரு வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மாணவர்கள் இணைந்து நடத்தும் சிறுவர் பங்களிப்புடனான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறும் இந் நிகழ்விற்கு குடும்ப புணர்வாழ்வு நிலையம் அனுசரணை வழங்குகிறது.

## யாழ்.பிரதேச செயலக ஒய்வூதியர் விவரம் இணையத்தளத்தில்

யாழ்.பிரதேச செயலகம் ஊடக மாதாந்தம் உள்நாட்டு, வெளிநாட்டு ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர் தமது விவரங்களை இணையத்தளத்தில் பார்வையிடலாம் என யாழ். பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தெரிவித்தார்.

ஓய்வூதியர் திணைக்களத்தின் www.pensions.gov.lk என்ற இணையத்தளத்தில் மாதாந்தம் இந்த விவரங்களை பார்வையிடலாம் என்று தெரிவித்தார். (01)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் மாணவன் காயம்

மிதிவண்டியில் ரியூசனுக்கு சென்ற எட்டு வயது மாணவனும் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் சிறுவன் காயமுற்றான்.

இதே இடத்தைச் சேர்ந்த செல்வரூபன் அகிலன்(வயது 8) என்னும் மாணவன் பற்கள் உடைந்தும் முகத்தில் காயமேற்பட்ட நிலையிலும் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

## வலிகாமத்தில் சில பகுதிகளில் இன்று மின் தடை

வலிகாமம் பதுதியில் சில பிரதேசங்களில் இன்று காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சாரசபை யாழ். பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

மருதனார் மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், இணுவில், கோண்டாவில், ஸ்ரேசன் பகுதி, தாவடி, சுதுமலை, குளப்பிட்டி, கொக்குவில், ஆனைக்கோட்டை, காக்கைதீவு, நவாலி, நாச்சிமார் கோயிலடி, தட்டாதெரு, கோம்பயன் மணல் ஆகிய பிரதேசங்களில் மின்தடை நடைமுறைப்படுத்தப்படும்எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

## தவறிவிட்டது

கொக்குவிலுக்கும் இணுவிலுக்கும் இடையில் நேற்று (27.08.2008) கைச் சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ரி.சுதந்திரபாலனுடன் (தொ.பே. இல. 222 2314) தொடர்பு கொண்டு வழங்கவும். சன்மானம் வழங்கப்படும்.






# மரண அறிவித்தல்கள்

## முருகன் மகாலிங்கம்

(முன்னாள் லிகிதர் (கிளாக்), கிளிநொச்சி M.O.H)



அறிவொளி வீதி, புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிட மாகவும் கொண்ட முருகன் மகாலிங்கம் 24.08.2008 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - பூரணம் தம்பதியினரின் அன்பு மக னும், காலஞ்சென்றவர்களான சிமியோன் - றோஸ்மணி தம்பதியினரின் அன்பு மருமகனும், மரியரீற்றா வின் (மருத்துவத்தாதி, யாழ்.போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும், மனோஜின் பாசமிகு தந்தையும், இராசதுரை (ஜேர்மனி), இராசேந்திரம், துரைராசா, வசந்தராணி (லண்டன்), [illegible]கராசா (இந்தியா), அற்புதராசா (யாழ். போதனா வைத்திய[illegible], யோகராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கு[illegible]சேகரம் (கொழும்பு), இராசசிங்கம் (இந்தியா), மரியராணி, [illegible]ஜயராஜம், குணசேகரம், றெஜினா (இத்தாலி), மேரியம்மா, பவுளின் (இத்தாலி), நஸ்கின் (இத்தாலி), ஜெயசீலன் (ஹொலண்ட்), றொபேட் (சுவிஸ்) ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.09.2008 லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
சிமியோன் குடும்பத்தினர்.

Hand Phone No:- 00447821596064
Land Phone No:- 00441142649253

## கந்தசாமி திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற பிராந்திய நிர்வாக உத்தியோகத்தர், தபால் திணைக்களம்/ நிர்வாகப்பணிப்பாளர், சிறுவர் மகிழ்வகம், யாழ்ப்பாணம்)



சாவகச்சேரி, பெருங்குளத்தைப் பிறப்பிடமாகவும் இராசபாதை, கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி திருநாவுக்கரசு 26.08.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தசாமி- முத்துப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், கட்டுவனைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், சுமங்கலா(பாடசாலை முகாமைத்துவ உதவியாளர், யாழ். கல்வி வலயம்), மயூரன் (மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கான நிகழ்ச்சிதிட்ட உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகதாஸ்(முன்னாள் கணக்காய்வுப் பரிசோதகர்/ கணக்காளர்-வடக்கு மாகாண சபை), மஞ்சுளா (ஆசிரியை- ஜிலான் மத்தியகல்லூரி, பாணந்துறை) ஆகியோரின் மாமனும், கமலாம்பிகை(சாவகச்சேரி),தம்பு(தம்பிராசா- ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர்), சிவராசா (ஓய்வுபெற்ற பிரதம அஞ்சல் அதிபர்), காலஞ்சென்ற இராசதுரை (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச்சகோதரனும், கீர்த்திகன்,வேணுஜன்,ஆத்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.08.2008), வியாழக்கிழமை மு.ப 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசபாதை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(77520)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி நடராசா புவனேஸ்வரி

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா புவனேஸ்வரி நேற்று (27.08.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவில் வித்துவான் காளிமுத்து நடராசாவின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகாக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. வடக்கு,
சித்தங்கேணி.

தகவல்:
N.இராமநாதன்
( மகன் - தவில் வித்துவான்).

# மரண அறிவித்தல்கள்

## திருமதி முத்தம்மா சின்னத்துரை



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடா றொரண்டோவில் வசித்த வருமாகிய திருமதி முத்தம்மா சின்னத்துரை (26.08.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளையப்பு - கதிராசிப்பிள்ளையின் கனிஷ்ட புதல்வியும், அம்பலவாணர் - கதிராசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், நல்லம்மா, இலட்சுமிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, தங்கம்மா, செல்லம்மா, முத்துவேலு ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வீரசிங்கம், நாகமுத்து ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெகதீஸ் வரன் (தாதிகள் பயிற்சிப் பாடசாலை, யாழ்ப்பாணம்) ஆனந்த நடேஸ்வரன் (கனடா) காலஞ்சென்ற விக்னேஸ்வரன், விமலா (கனடா), விஜியகலா (கனடா), சசிகலா (கனடா), யோகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்பராணி, இராசமணி (கனடா), சபாபதிப்பிள்ளை (கனடா), தியாகலிங்கம் (கனடா), ஸ்ரீஸ்கந்தராசன் (கனடா), ஜீவதர்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் நதியா (1 ஆம் வருடம் கலைப்பிரிவு மாணவி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்), ஷர்மிளா (2009 கலைப் பிரிவு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி), யாதவன், மெலாணி, தனுசா, மயூரன், திஜீபா, சாஜு, சாரங்கா, அபீனா, யொனிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா (றொரண்டோ) வில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசுவன் சந்தி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

தகவல்:
சி.ஜெகதீஸ்வரன்
(ஜெயன் – மகன்)

## பரமு தியாகராசபிள்ளை



பெரியமாவடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பரமு தியாகராசபிள்ளை 26.08.2008 செவ்வாய்க்கிழமை இரவு சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமு - நாகமுத்து தம்பதியரின் மகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் கோணேஸ்வரன் (பெல்ஜியம்), திருமதி த.கோணேஸ்வரி, கேதீஸ்வரன் (சுவிஸ்), ஜனார்த்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் க.தயாபரன், திருமதி கே.நிர்மலா ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுஷன், அனுஷன், நிலூஷா, ஹரிஸ், ஹத்தை ஆகியோரின் அன்புப் பேரனும் ப.முருகேசபிள்ளை (அமரர், ஆசிரியர்), கணேசானந்த, மகாதேவ சுவாமிகள் (மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி) விசாலாட்சி (அமரர்), வேலாயுதபிள்ளை (அமரர்) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.08.2008) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் அல்லாரை கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உப்புக்கேணி வீதி,
பெரியமாவடி,
சாவகச்சேரி.

தகவல்:
க.தயாபரன்
(மருமகன்)

## சிவானந்தசுந்தரம் பிறேமதர்சன்



யூனியனடி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தசுந்தரம் பிறேமதர்சன் நேற்று (27.08.2008) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிவானந்தசுந்தரம் - செல்வராணி தம்பதியரின் மூத்த புதல்வரும் நிதர்சனின்(யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2008) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள்; யாழ்.அணிகளுக்கு ஏழு முதலிடங்கள்

வவுனியா,ஓக.28

வவுனியாவில் நடைபெற்றுவரும் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போட்டிகளில் ஏழு போட்டிகளில் யாழ்.பாடசாலை அணிகள் மாகாணச் சம்பியனாகின.

செவ்வாயன்று பெரும்பாலான போட்டிகள் உள்ளகத்திலேயே இடம்பெற்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெறவிருந்த 15, 19 வயதுப் பிரிவுகளுக்கான கரபந்தாட்டப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவுப் போட்டி மட்டுமே இடம்பெற்றது. மழை காரணமாக மற்றைய போட்டிகள் இடம் பெறவில்லை.

15 வயதுப் பிரிவினருக்கான கரபந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் இராமலிங்க நடராஜ வித்தியாலயம் சம்பியனானது. புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி இரண்டாம் இடத்தைச் சுவீகரித்தது.

நேற்றுமுன்தினம் நடந்த உள்ளக விளையாட்டுப் போட்டிகளின் முடிவு வருமாறு:

**சதுரங்கம்**

★ *ஆண்கள்: 15 வயதுப் பிரிவு* - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வவுனியா தமிழ் ம.வி.

★ *19 வயதுப் பிரிவு* - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வவுனியா தமிழ் ம.வி.

★ *பெண்கள்: 15 வயதுப் பிரிவு* - வட இந்து மகளிர் கல்லூரி, வவுனியா சைவப் பிரகாச மகளிர் ம.வி.

★ *19 வயதுப் பிரிவு* - வவுனியா சைவப்பிரகாச மகளிர் ம.வி., வவுனியா ரம்பைக்குளம் ம.வி.

**கூடைப்பந்தாட்டம்**

★ ***ஆண்கள்*** - யாழ்.மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி.

**மேசைப்பந்தாட்டம்**

★ *ஆண்கள்* - மன்னார் சென்.சேவியர், யாழ்.மத்திய கல்லூரி.

★ *பெண்கள்* - வவுனியா ரம்பைக்குளம் ம.வி., தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

**பூப்பந்தாட்டம்**

★ ***ஆண்கள்*** - உடுவில் மான்ஸ் பாடசாலை, மன்னார் சென்.சேவியர்.

★ *பெண்கள்* - உடுவில் மான்ஸ் பாடசாலை, வவுனியா ரம்பைக்குளம். (1)

## குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தினர் 966 சிறுவர்களுக்கு கற்றல் உதவி

யாழ்ப்பாணம்,ஓக.28

குடும்பப் புனர்வாழ்வு நிலையம் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன் 966 சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் சோனகதெரு ஜே/87, புதிய சோனகதெரு ஜே/88,சண்டிலிப்பாயிலுள்ள கொம்பனிப்புலம்,ஐயனார் நலன்புரி நிலையம்,

சங்கானைப் பிரிவிலுள்ள கப்பண்டா, அமைதி, தோப்பு, போதகர், ஓடக்கரை, ஸ்ரீ முருகன், கம்பனை, சமுத்திரா ஆகிய நலன்புரி நிலையங்களில்,வீராவத்தை, குடாக்கனை ஆகிய கிராமங்களிலுள்ள மிக வறிய, இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

403 சிறுவர்களுக்குக் கல்வி உபகரணங்களும்,254 சிறுவர்களுக்குச் சப்பாத்துகளும், 309 சிறுவர்களுக்கு சீருடைத்துணிகளும் வழங்கப்பட்டுள்ளன. (202)

## தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளை சனிக்கிழமைகளில் இயங்காது

யாழ்ப்பாணம்,ஓக.28

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளையினர் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு சனிக்கிழமைகளில் வங்கிச் சேவை நடைபெறுவதை இடைநிறுத்தவுள்ளனர்.

எதிர்வரும் 13ஆம் திகதி தொடக்கம் சனிக்கிழமைகளில் வங்கிச்சேவை இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

## வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன

நாவற்குழி,ஓக.28

உரும்பிராய் கிழக்கு சென்.மைக்கேல் முன்பள்ளியைச் சேர்ந்த 16 மாணவர்களுக்கு உரும்பிராய் மக்கள் வங்கியினால் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வங்கிக் கணக்குப் புத்தகங்கள் உரிய மாணவர்களுக்கு வங்கி முகாமையாளர் பி.கார்த்திகேசால் அண்மையில் வழங்கப்பட்டன. (202-288)

## யாழ்.மாவட்ட முதியோரை இணைத்து நலன்பேணும் சங்கம் உருவாக்கம்

நாவற்குழி,ஓக.28

யாழ்.மாவட்டத்தில் வசிக்கின்ற முதியோர்களை ஒன்றிணைத்து ''முதியோர் நலன்பேணும் சங்கம்'' ஒன்று விரைவில் உருவாக்கப்படவுள்ளது.

இத்தகவலை சமூகநலத்துறைத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட திட்ட இணைப்பாளர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பான ஈடுபாடு கொண்ட முதியோர்கள் தமது ஆலோசனைகளை வழங்க விரும்பினால் எதிர்வரும் 15 ஆந் திகதிக்கு முன்னர் தத்தமது பிரதேச செயலகத்தில் உள்ள சமூக சேவை அலுவலருடன் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி சமூக நலத்துறைத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் உருவாக்கப்படவுள்ள இந்த முதியோர் நலன்பேணும் சங்கத்தில் ஒவ்வொரு பிரதேச செயலகத்தையும் சேர்ந்த இரண்டு முதியோர்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (202-288)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் இடைநிறுத்தப்பட்டிருந்த கட்டடப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஓக.28

சிமெந்துத் தட்டுப்பாடு காரணமாக இடைநிறுத்தப்பட்ட சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது வைத்தியசாலை நிர்வாக அலகுக் கட்டடம், குடிதண்ணீருக்கான தாங்கிகள் அமைத்தல் போன்ற வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆண்,பெண் சிகிச்சை விடுதிகள், சிறுவர் சிகிச்சை விடுதி, வைத்திய அதிகாரியின் வதிவிடம் ஆகிய கட்டட வேலை பூர்த்தியடையாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-207)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.28

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மாணவர்களுக்கும், பாடசாலை விட்டு விலகியோருக்கும் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

யாழ்.இளைஞர் கணனி சேவைகள் நிறுவனத்தினர் இக்கருத்தரங்கை நடத்தவுள்ளனர்.

இக்கணனித் தொழில்நுட்பக் கருத்தரங்கில் தீவக பிரதேசத்திற்கு உட்பட்ட கணனி ஆர்வலர்கள் பங்குகொண்டு பயன்பெறுமாறு பிரதேச சபைச் செயலாளர் கை. மகேந்திரலிங்கம் கேட்டுள்ளார்.

கருத்தரங்கு முடிவில் எழுத்துப் பரீட்சை வைக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

மேற்படி கருத்தரங்கில் பங்குகொண்டு பயன்பெற விரும்பும் மாணவர்கள், ஆர்வலர்கள் எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை பிரதேச சபையில் மேற்கொள்ளவும். (202-95)

# உள்ளூர் உணவு உற்பத்தியை மேம்படுத்த வீட்டுத்தோட்ட செய்கையாளரிடையே போட்டிகள்

## மாவட்டத்தில் வெற்றி பெற்றவர்கள் இன்று கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.28

உள்ளூர் உணவு உற்பத்தியைத் துரிதப்படுத்தும் நோக்கில் வீட்டுத்தோட்டச் செய்கையாளர்களிடையே போட்டிகள் நடத்தப்பட்டன.

தேசிய வேலைத்திட்டம் 2007-2010 இன் கீழ் இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

யாழ்.மாவட்ட ரீதியில் போட்டியில் வெற்றி பெற்றவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராஜா கலந்துகொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார்.

மாகாண அரசால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

*தனியார் வீட்டுத்தோட்டம்:* பு.சந்திரோதயம் (கொடிகாமம்), பூ.சிறீகாந்தன் (புங்குடுதீவு), க.சிறிகாந்தவேலு (அச்சுவேலி).

*நகர வீட்டுத்தோட்டம்:* மரியநாயகம் போல் (யாழ்ப்பாணம்), ந.கனகநாயகம் (யாழ்ப்பாணம்), இ.வாகீசன் (பருத்தித்துறை).

*அலுவலக வளாகத் தோட்டம்:* வேலணை பிரதேச செயலகம், கோப்பாய் கால்நடை வைத்திய அலுவலகம், சாவகச்சேரி நகர சபை.

*பாடசாலைத் தோட்டம்:* சென்.ஜோன்ஸ் கல்லூரி, நெல்லியடி ம.ம.வித்தியாலயம், கைதடி நவீல்ட் பாடசாலை.

*மாணவர் வீட்டுத் தோட்டம்:* க.அருட்குமரன் (கரவெட்டி), தி.வாசுகி (சாவகச்சேரி), அ.டினேஸ் (திருநெல்வேலி).

மத்திய அரசால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:

*தனியார் வீட்டுத்தோட்டம்:* ரி.திருக்குமார் (கோப்பாய் மத்தி), ரீ.சண்முகம் (நெடுந்தீவு), திருமதி க.சுப்பிரமணியம் (கொடிகாமம்).

*மாணவர் வீட்டுத்தோட்டம்:* க.அருள்குமரன் (கரணவாய் வடக்கு), தி.வாசுகி (சாவகச்சேரி), கு.சபீசன் (பண்டத்தரிப்பு).

*பாடசாலைத் தோட்டம்:* சென்.ஜோன்ஸ் கல்லூரி, நெல்லியடி ம.ம.வி., குப்பிளான் விக்னேஸ்வரா ம.வி.

*நகர வீட்டுத்தோட்டம்:* மரியநாயகம் போல் (யாழ்ப்பாணம்), என்.கனகநாயகம் (யாழ்ப்பாணம்), திருமதி த.சந்திரா (பருத்தித்துறை).

*அலுவலர் வீட்டுத்தோட்டம்:* கே.சிவலிங்கம் (இளவாலை), எஸ்.பிரதாபராஜன் (கோண்டாவில்), ஆர்.சிறீரஞ்சன் (சுழிபுரம்).

*அலுவலக வளாகத் தோட்டம்:* வேலணை பிரதேச செயலகம், தெல்லிப்பழை பிரதேச செயலகம், ஜே/157 கிராம அலுவலகம். (202)

## இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு,ஓக.28

ஏழாலை அம்பாள் மத்திய விளையாட்டுக் கழகம், உதைபந்தாட்ட லீக்குகளில் பதிவுசெய்யப்படாத விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அம்பாள் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

★ ஈவினை அம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் புன்னாலைக்கட்டுவன் கலைவாணி விளையாட்டுக் கழகம். (202-86)

## இந்து விடுதியில் அன்னதானம்

யாழ்ப்பாணம், ஓக.28

யாழ்.மாநகரசபை நீர் வழங்கல் பகுதியில் செயற்பட்டுவரும் கலியுகவரதன் இந்து மன்றத்தால் வருடந்தோறும் நல்லூர் கந்தன் ஆலயத் தேர்த்திருவிழா அன்று நடத்தப்பட்டுவரும் அன்னதான நிகழ்வு இம் முறையும் வழமைபோல இந்து விடுதிக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது என்று அந்த மன்றம் அறிவித்துள்ளது. (202)

## சிறுவர் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 28

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் அனுசரணையுடன் கப்பண்டா, அமைதி, தோப்பு, போதகர், ஓடக்கரை ஆகிய நலன்புரி நிலைய மாணவர்கள் இணைந்து நடத்தும் சிறுவர் பங்களிப்புடனான விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு சங்கானை அமெரிக்க மிசன் தமிழ்கலவன் பாடசாலையில் நடைபெறும். பிரதம விருந்தினராக மாகாண மட்ட விளையாட்டு வீராங்கனை ஆர்.ராஜ்பிரியா கலந்துகொள்வார்



86ஆவது சர்வதேசக் கூட்டுறவாளர் தினவிழா அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக கற்கைகள் பீடாதிபதி க.தேவராஜா மங்கல விளக்கேற்றுவதையும், கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி உரை நிகழ்த்துவதையும் முதல் 2 படங்களிலும் காணலாம்.

கூட்டுறவு தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டியில் பரிசில் பெற்ற மாணவி ஒருவருக்கு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் [illegible] பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்திலும், காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பிராய் முகாமிலுள்ளோருக்கு உபகரண உதவி

கோப்பாய், ஒக.28

உரும்பிராய் நலன்புரி நிலையத்தில் உள்ள 18 குடும்பங்களுக்கு 'யுஎன்டி' நிறுவனம் தொழில் உபகரணங்களை வழங்கியுள்ளது.

இத்தகவலை கோப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(202-72)


All Students & workers Can face the future With confidence



IBMS

Basic Level

ENGLISH

A General English Course designed to cover and improve the 4 main language skills of Reading, Writing, Listening & Speaking.

Commencement :-29th,31st August 2008 Register Before :-28 August 2008
Duration :-3 Mouths Time :-10.00 a.m.

G.C.E.O/L மாணவர்களுக்கான

English Literature

G.C.E O/L மாணவர்களுக்கான English Literature வார,வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. ஓர் பிரிவில் 30 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். ஆகவே உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

2008 O/L பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களே இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள் | 29.08.2008 31.08.2008 ஆரம்பம் பகல் 10.00மணி

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES

#209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8232 Fax: 021 222 6933


## இலங்கை மின்சார சபை- யாழ்.பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு 28.08.2008 வியாழக்கிழமை காலை 9.00மணிமுதல் மாலை 5.00 மணி வரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், இணுவில், கோண்டாவில், ஸ்ரேசன் பகுதி, தாவடி, சுதுமலை, குளப்பிட்டி, கொக்குவில், ஆனைக்கோட்டை, காக்கைதீவு, நவாலி, நாச்சிமார் கோயிலடி, தட்டாதெரு, கோம்பயன் மணல் பிரதேசம்.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

**பிரதேச மின் பொறியியலாளர்,**
**இலங்கை மின்சார சபை,**
**யாழ்.பிரதேச அலுவலகம்,**
**சுன்னாகம்.**
27.08.2008

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"

**இலங்கை மின்சார சபை.**

(கி/554454)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 12 . 1937



உதிர்வு 17 . 08 . 2005

### திருமதி பராஜசிங்கம் கிருஷ்ணவதி

திதி: அபரபட்ச திரயோதசி

உதிரமூட்டி உரம் ஊட்டி வளர்த்தாய்
திறனூட்டி தெரிய வைத்தாய் உலகை
உடனிருந்து உளம்காட்டி உறவு காத்தாய்
கடன்தாயே, நீ இட்ட தருமமெல்லாம் தீர்க்கலாமோ?

வாடவில்லைத் தாயே நீ ஊற்றிய நீரின்னும் உண்டு!
மூடவிட வில்லை வானம், உனக்கு முடிவுமில்லை!
காணும்தூரம் நீ நின்று எம்மைக் காத்து நிற்கும் போது!
காணக் கண்கூசும் உயரம் வளர்வோம் தாயே உன் துணிவால்

உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல ஆத்திஅடிப் பிள்ளையாரை மனமுருகி வேண்டுகின்றோம்.

யாழ்.வணிக நிலையம்,
27/7, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

(சி/554452)

## சொற்பொழிவு

ஸ்ரீ ...லிபுரஆழ்வார் ...வி கோயிலின் ...வார் ஆ... ...டை செ... ...மீக நிகழ்... எதிர் வரும் ... யிற்றுக் கிழமை ...ற்பகல் 11 மணிக்கு யாழ்ப் பா... ...ல்கலைக் க... ...வன் க. ரமணன் 'தெய்வீக வாழ்க்கை' என்னும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(202-86)



வலி.கிழக்கு பிரதேச செயலக பண்பாட்டு பெருவிழாவில் இடம்பெற்ற மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வில் அச்சுவேலி தெற்கு, நாவற்காட்டைச் சேர்ந்த தவில் வித்துவான் சீனியர் குமரகுருவுக்கு ''செம்புல கலைஞர்'' விருது வழங்கி வண.பிதா ஜே.பி.அன்ரனி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஜும் படத்தில் காணப்படுகின்றார். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*

## திட்டமிடல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்; ஒக.28

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்ற அலுவலர்களுக்கான திட்டமிடல் கருத் தரங்கு இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் செலாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள், நிகழ்ச்சித்திட் உதவியாளர்கள் இக் கருத்தரங்கில் பங்குபற்ற அழைக்கப்பட்டுள்ளனர்.

இத் திட்டமிடல் கருத்தரங்கில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எவ்.ஜோன்சன் ஆகியோர் விரிவுரையாற்றவுள்ளனர் என யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் தெரிவித்தார்.

(202-95)

## இசை வகுப்புகள்

வலி.வடக்கு, ஒக. 28

தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலயத்தில் சனி, ஞாயிறு நாள்களில் சங்கீத வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

மிருதங்கம், சங்கீதம், பண்ணிசை வகுப்புகள் இலவசமாக நடைபெறுகின்றன.

புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் மற்றும் ...சத் துறையில் ஆர்வம் உடைய மாண...ள் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொ... முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சனி, ஞாயிறு நாள்களில் காலை 9 மணிக்கு தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலயத்திற்கு வருகை தந்து வகுப்புகளில் கலந்து கொள்ள முடியும் என பொறுப்பாளர் வரதராஜசர்மா தெரிவித்துள்ளார்.

(202-86)

## கசிப்பு உற்பத்தி செய்த நான்கு பேருக்கு ரூ.15 லட்சம் அபராதம்

யாழ்ப்பாணம், ஒக.28

சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட நால்வருக்கு 15 லட்சம் ரூபா சாவகச்சேரி நீதிமன்றில் அபராதமாக விதிக்கப்பட்டது.

கசிப்பு உற்பத்திக்குக்குப் பயன்படுத்தும் கோடா 2 ஆயிரத்து 160 டிராம் வைத்திருந்த மூவருக்கு, தலா 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதமும 384 டிராம் கசிப்பு வைத்திருந்த ஒருவருக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

கோடா வைத்திருந்தவர்கள் அபராதத் தொகையை செலுத்தத் தவறின் தலா 36 மாத சாதாரண சிறையும் கசிப்பு வைத்திருந்த நபர் அபராதத் தொகை செலுத்தத் தவறின் 24 மாத சாதாரண சிறைத் தண்டனையும் அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

சாவகச்சேரி பொலிஸார் மீசாலை மேற்கு, மீசாலை வடக்கு ஆகிய இடங்களில் கடந்த 9,10 ஆம் திகதிகளில் நடத்திய திடீர் பரிசோதனையின்போது அகப்பட்ட 7 பேர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.

இவ் வழக்குகள் கடந்ததிங்கட் கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதுமேற்படி அபராதத் தொகைகள் விதிக்கப் பட்டன.

(202-207)

## கண்ணீர் அஞ்சலி



*எமது பாடசாலையின் சக ஆசிரியை*
**திருமதி அருந்ததி யோகலிங்கம்**
*அவர்களின் அன்புத் தந்தை*
**அம்பலவாணர் செல்வராசா**
*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

யா/ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர். (77515)

**நலன்புரிக் கழகம்.**

## தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் கைதடி
## பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

**1. சம்பள அளவுத்திட்டம்:**
11450-14500 (கூ.வே.ஆ சுற்று நிருபம் 66/2006 இன் படி)
145x10-160x10
சம்பள குறியீட்டு இல:101/07(சுற்.நிரு.இல. 165/88 இன் படி)

**2. வயது : 25 தொடக்கம் 45 வரை (சங்கப் பணிப்பாளர்களுக்கு வயது எல்லை கணிக்கப்படமாட்டாது)**

**3. விண்ணப்ப முடிவுத்திகதி : 08.09.2008**

**4. பிணைப்பணம் : உரொக்கம் 60000/-**
**ஆதனம் 50000/-**

5. 1. சங்க எல்லைப்பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. கணனி அறிவுத்திறனும் அவசியமாக இருத்தல் வேண்டும்.
3. மேலதிக விபரங்களை சங்கத்தலைமைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

6. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களின் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் ''*தலைவர், தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து) மானிப்பாய் வீதி, கைதடி*'' என்ற முகவரிக்கு ''பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்'' என கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

8. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :

அ) கூட்டுறவுப் பணியாளரின் 8ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் மூன்று(3) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஆறு(6) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்ட பதவியொன்றில் எட்டு(8) வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இந்த எட்டு வருட கால அனுபவத்தில் இரண்டு வருடங்களுக்குக் குறையாமல் சிரேஷ்ட முகாமை மட்ட பதவியொன்றில்அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரச் (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ.த (உயர்தரம்) மூன்று(3) பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்ட பதவியொன்றில் பத்து (10) வருடங்களுக்கு குறையாத அனுபவம். இந்த பத்துவருட கால அனுபவத்தில் இரண்டு வருடங்களுக்குக் குறையாமல் சிரேஷ்ட முகாமை மட்ட பதவியில் இரண்டு (2) வருட கால அனுபவம்.

**குறிப்பு:**

விண்ணப்பப் படிவத்தினை ரூபா 20/- செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் சனிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 1 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பப்படிவங்களும் சான்றிதழ் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்கவோ நிராகரிக்கவோ நெறியாளர் குழுவிற்கு உரிமை உண்டு.

தென்மராட்சி மே.பல.நோ.கூ.சங்கம்,
மானிப்பாய் வீதி, கைதடி. (சி/554451)

**இ.பராசசேகரம்**
*தலைவர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை

# திறப்பு விழா சிறப்பிதழ் - 28.08.2008




## கிராம மக்கள் நோயற்று வாழ வழிவகுக்கும்



மானிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமமான ஆனைக்கோட்டைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட மருத்துவமனை இன்று 28.08.2008 வியாழக்கிழமை அதிகாலை திறப்புவிழா காண்பதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கதிர்.கிருஷ்ணேஸ்வரக் குருக்கள்,
மூத்தநயினார் கோயில்,
பிரதமகுருக்கள்,

## சகலரும் பயன்பெறும் வகையில் வளர்ச்சி காணவேண்டும்



கடந்த 65 வருடங்களுக்கு மேலாக மானிப்பாய் தெற்கு பகுதியில் தனியார் வீடுகளில் மத்திய மருந்தகம் மகப் பேற்று மனை என்ற பெயருடன் இயங்கி வந்த இச்சிறிய வைத்தியசாலையை அதன் சொந்தக் காணியில் ஒரு பெரிய வைத்தியசாலையாக அமைக்க வேண்டியதொரு தேவை ஏற்பட்ட பொழுது அதற்குரிய காணியை நாம் பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்கம் அக்காணியில் வைத்திசாலையை அமைப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்கிய அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் எமது அபிவிருத்திச் சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் வழங்கிய ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திச் சபையின் தலைவர் என்ற வகையில் தலை வணங்குகின்றேன். இன்று சிறியளவில் பிரதேச வைத்தியசாலையாக ஆரம்பிக்கப்படும் இவ்வைத்திய சாலை எதிர்காலத்தில் ஒரு பெரிய வைத்தியசாலையாக மாறி மானிப்பாய் பிரதேச மக்கள் மட்டுமன்றி சகல பிரதேச மக்களும் பயன்பெறும் அளவுக்கு வளர்ச்சியடைய வேண்டும் என்று வாழ்த்தி வணங்குகின்றேன்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமையின்றேல் அனைவருக்கும் தாழ்வு"

இ.மனோகரன், தலைவர்,
பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, மானிப்பாய்.

## வைத்தியசாலை உருவாக பல வழிகளிலும் உதவிய அனைவர்க்கும் நன்றி



வைத்தியசாலை சம்பந்தமாக என்னால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி நியாயமானது என்று சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த 1999ஆம் ஆண்டில் தங்கள் பொது அமைப்புகள் ஊடாக கடிதங்கள் வழங்கிய நவாலி- மானிப்பாய்- சுதுமலை- சாவற்கட்டு- உயரப்புலம்- முள்ளி- ஆனைக்கோட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 19 பொதுஅமைப்புகளுக்கும் முதற்கண் நன்றி தெரிவிப்பதுடன், இக்காணியை யாம் வாங்குவதற்கு பண உதவி புரிந்த பெரியார்களுக்கும் இதை நிறைவேற்றிய எமது சபையின் சகல நிர்வாகிகளுக்கும் நன்றி சொல்வதுடன், மேற்படி செயற்திட்டத்தை நிறைவேற்ற பல வழிகளிலும் ஆக்க பூர்வமான பங்களிப்புகள் செய்து ஆலோசனைகளை வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு

பொன்.கனகரத்தினம் ஜே.பி.,
செயலாளர், வைத்தியசாலை அபிவிருத்திச் சபை.

## நிறைவான சேவையாற்ற வேண்டும்



இறையருளால் இவ்வைத்தியசாலைக் கட்டடம் நிறைவு பெற்று திறப்புவிழா நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இவ்வைத்தியசாலை இப்பிரதேச மக்களுக்கு நிறைவான சேவையாற்ற வேண்டும் என்று இந்நாளில் இறைவனை வேண்டிக் கொள்கிறேன். நானும் ஏனைய நிர்வாகத்தினரும் சேர்ந்து மக்களின் பங்களிப்புடன் காணியைக் கொள்வனவு செய்தது மிகவும் ஒரு மன மகிழ்வைத் தருகிறது. இவ்வைத்தியசாலை மேன்மேலும் வளர ஆசிகூறி இறை வனை பிரார்த்திக்கிறேன்.

செ. சிவபாதம்,
தலைவர்,வலி. தென்மேற்கு க.தொ.கூ. சமாசம்.

## போற்றுதற்குரிய பணி



பல்லாண்டு காலமாக நிரந் தர கட்டடமின்றியிருந்த மானிப்பாய் வைத்தியசாலைக்கு , தற்போது நிரந்தரக் கட்டடம் அமைக்கப் பெற்றமை போற்றத் தக்கது. பொதுமக்களின் பேருதவியாலும், மானிப்பாய் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முயற்சியாலும், சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பேருதவியாலும் அழகான வைத்தியசாலைக் கட்டப்பெற்று இன்று திறப்புவிழா நடைபெறுவதை முன்னிட்டு பாராட்டுவதோடு, மேன்மேலும் இவ்வைத்தியசாலை வளர்ச்சிய டைய பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

க.கதிரேசு,காப்பாளர்.

## பிரதேச மக்களுக்கு நீடித்த சேவைக்கான வசதி



மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் திறந்து வைக்கப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பிரதேசத்திற்கான வைத்தியசாலை நீண்ட காலமாக ஒரு தனியார் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது. இக்கட்டடத்தில் ஒரு வைத்தியசாலைக்கான அடிப்படை வசதிகள் இல்லாமையால் வைத்திய சேவைகளை சீராக வழங்குவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டன. இதனால் நோயாளர்களும் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

இவ்வைத்தியசாலையை புதிதாக பொருத்தமான இடத்தில் கட்டியெழுப்ப தீர்மானிக்கப்பட்டபோது வைத்தியசாலைக்கான காணியைப் பெற்றுக் கொள்வதில் பலத்த சிரமங்கள் ஏற்பட்டன. ஆனால் இப்பிரதேச மக்கள் தாமாக முன்வந்து நிதி திரட்டி ஒரு பொருத்தமான காணியைக் கொள்வனவு செய்து சுகாதாரத் திணைக்களத்திடம் கையளித்தனர். அதனைச் சுகாதாரத் திணைக்களம் நன்றியுடன் நினைவு கூருகின்றது. மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் நிதி மூலம் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடமும், துரித அபிவிருத்தித் திட்ட நிதி மூலம் தண்ணீர் தாங்கியும், முன்புற மதிலும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இப்பிரதேச வைத்தியசாலைக்காக மகப்பேற்று விடுதி, ஆண்கள், பெண்கள் விடுதிகள், வைத்தியர், மருத்துவமாது விடுதிகள் அமைக்கப்பட வேண்டும்.

இன்று திறந்து வைக்கப்படும் இவ்வைத்தியசாலை இப்பிரதேச மக்களுக்கு சிறந்த சேவைகளை நீடித்து நிலைத்து நின்று வழங்க எனது நல்வாழ்த்துக்கள்.

வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம்.

## கனவு நனவாகிறது

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைவதைக் கண்ணுற்றுப் பெருமகிழ்வு அடைகிறேன். நெடுங்காலமாகத் தனியார் கட்டடத்தில் இயங்கிய இவ்வைத்தியசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைய வேண்டும் எனும் இப்பிரதேச மக்களின் கனவு இன்று நனவாகின்றது. இம்முயற்சிக்கு அயராது உழைத்த யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், மற்றும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பொன்னையா பேரானந்தன்.

## பல தியாக உள்ளங்களின் பங்களிப்பு நிறைவேறுகிறது



பிரதேச வைத்தியசாலை ஒன்றை மானிப்பாய் பிரிவுக்குள் அமைக்க வேண்டும் என்று நீண்டகாலமாக உழைத்து இன்று திறப்பு விழாக் காணும் நன்நாளில் ஆசி கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை, சாவற்காடு ஆகிய இடங்களில் வசிக்கும் மக்கள் பலவிதமான இடையூறுகள் மத்தியிலும் விடாமுயற்சியுடன் செயற்பட்டு வந்தனர். இச்செயற்பாட்டை விரைவுபடுத்துவதற்காக பொதுச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை ஒன்றிணைத்து ஒரு கட்டமைப்பை உருவாக்கி பொதுமக்களின் ஒத்துழைப்புடன் துரிதமாக செயல்பட்டு வந்தனர். பல தியாக சிந்தனையுடைய உள்ளங்களின் பங்களிப்பு இச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்குக் காரணமாக அமைந்தது. இதனால் ஆனைக்கோட்டைப் பகுதியில் இப்பிரதேச வைத்தியசாலை அமைக்கப்பட்டு 28.08.2008ஆம் திகதி திறப்புவிழா நிகழ்வு நடைபெறுகின்றது. இவ்வைத்தியசாலையை அமைப்பதற்கு முன்னின்று உழைத்த அனைவரையும் வாழ்த்துகின்றவேளையில் இவ்வைத்தியசாலை மூலம் சிறப்பான சேவையை மக்கள் பெற்றுக்கொள்ள இறைவனின் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

அருட்திரு. அ.ப.அன்ரனிப்பிள்ளை.

## மேன்மேலும் வளர்ச்சியுறப் பிரார்த்திக்கிறேன்



மூத்தநயினார் அருளால் ஆனைக்கோட்டையில் புதிதாக அமைக்கப்பட்ட மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையின் திறப்புவிழாவினையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வைத்தியசாலை உருவாக்கத்திற்கு அல்லும் பகலும் உழைத்த வைத்தியசாலை அபிவிருத்தி சபையினர் உட்பட அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இவ்வைத்தியசாலை எதிர்காலத்தில் மக்களுக்கு சிறந்த சேவையாற்றி மேன்மேலும் வளர்ச்சிபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

துரைராஜா இராமச்சந்திரன்,
துணைத்தலைவர், மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்.

## கிராமத்துக்கு மகுடம்

எமது கிராமத்தில் திறக்கப்பட இருக்கும் மானிப்பாய் வைத்தியசாலை கிராமத்திற்கு மகுடம் சூட்டப்பட்டது போல் அமைந்துள்ளது. மேலும் இவ் வைத்தியசாலை எமது கிராமம் மற்றும் அயல்கிராமங்களான நவாலி, உயரப்புலம், சாவற்கட்டு, மானிப்பாய் ஆகிய மக்களின் அயராத உழைப்பால் உயர்ந்து நிற்கிறது. இவ்வைத்தியசாலை அமைந்த நோக்கம் ஏழை, எளிய மக்களுக்கு சேவை செய்ய வேண் டும் என்பதே. ஏழை, எளிய மக்களின் சுகாதார நிலையை உயர்த்தி, ஒரு நோயற்ற சமூகத்தை உருவாக்கவும் மேலும் பல பிரிவுகளையும் ஆரம்பித்து நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் பெரிய ஆஸ்பத்திரியாக மாற்றவும் இப்போது இருக்கும் அபிவிருத்திச் சபைக்கு போதிய ஒத்துழைப்பை மக்கள் வழங்க வேண்டும் என்று கூறி வாழ்த்துகிறேன்.

வை.சந்திரராஜ்,
கிராம அலுவலர், ஜே/133,ஆனைக்கோட்டை.

## பூரணமான வைத்தியசாலையாக வேண்டும்



ஆனைக்கோட்டையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மானிப்பாய் பிரதேச வைத்தியசாலைக் கட்டடம் இன்று கோலாகலமாக திறந்து வைக்கப்படுவதையிட்டுப் பேருவகையடைகின்றேன். குடிமக்கள் செறிந்து வாழும் பகுதியாகிய ஆனைக் கோட்டை, நவாலி, மானிப்பாய் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பிரதேச வைத்தியசாலை ஒன்று தனது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வரவேண்டும் என்ற மேற்குறித்த மக்களின் பேரவா. யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும், மாகாண அரசும் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பலனாக வைத்தியசாலைக் கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டு இன்றைய தினம் திறப்புவிழாக் காண்கின்றது. குறித்த பிரதேச வாழ் மக்களின் நீண்ட நாள் எண்ணம், பிரார்த்தனை, கனவு இன்று நனவாகியுள்ளது. இன்றைய நன்நாளில் இதனை அமைப்பதற்கு வித்திட்ட அரசிற்கும், பணிப்பாளருக்கும், ஒத்துழைப்பு நல்கிய மக்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மா.தியாகராஜா.

## அல்லும் பகலும் அயராது உழைத்தோர்க்கு நன்றி



கடந்த 70 வருடங்களாகத் தனியார் கட்டடங்களில் இயங்கி வந்த இவ்வைத்தியசாலை மக்களின் பங்களிப்புடன் சொந்தக் கட்டடத்தில் அமைந்துள்ளதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். வைத்தியசாலையை அமைப்பதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்த வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினருக்கும், இதற்கு உறுதுணையாக நின்ற ஆனைக்கோட்டை கிராம சேவையாளர், யாழ்.சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பி.பொன்னுத்துரை, பத்திரிகையாளர்.


## விளம்பர அனுசரணை வழங்குவோர்

து.பிரேமச்சந்திரன்
கமலா ஸ்ரோர்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

மா.மனோகரன்
மனோ அம்பீஸ்
மானிப்பாய்.

சு.தர்மராசா
ரயர்வேக்ஸ்
ஆனைக்கோட்டைச் சந்தி.

த.கணேசலிங்கம்
தணிஸ்ரெக்ஸ்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

த.கனகநாயகம்
வெஸ்ட்வின் கொமினிகேசன்
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

நா.கனகரத்தினம்
றோமியோ சிகை அலங்கரிப்பு நிலையம்
ஆனைக்கோட்டைச் சந்தி.

து. இராமச்சந்திரன் (கண்ணன்)
கண்ணன் பான்சிஹவுஸ்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

ரி.கிருபாகரன்
அஸ்ரன் கல்வி நிலையம்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

ராஜன் போட்டோ தொலைத்தொடர்பகம்
மூத்தநயினார் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

ச.சுந்தரலிங்கம் - .V.S.S
சுத்தமான சாப்பாட்டு, நல்லெண்ணை தயாரிப்பாளர்
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

பாலா
ஒக்ஸ்போட் ரேடர்ஸ்
ஆனைக்கோட்டைச் சந்தி.

சி.சிவரூபன்
ரூபன் பிறிண்டேர்ஸ்
ஆனைக்கோட்டைச் சந்தி.

பொ.பாஸ்கரன் .V.S.P
சுத்தமான நல்லெண்ணை விற்பனையாளர்
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

செ.சிவபாதம்
குமரன் மரத்தொழிற்சாலை
தீராந்தி, பலகை விற்பனையாளர்
முருகமூர்த்தி கோயில், நவாலி கிழக்கு.

அ.மோகன்
கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்.
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

எஸ். மகேந்திரன்
மகேந்திரா இந்திரா எஞ்சினியேர்ஸ்
சுதுமலைச்சந்தி, மானிப்பாய்.

தில்லையம்பலம் கந்தையா
சுத்தமான சாப்பாட்டு நல்லெண்ணை விற்பனையாளர்
மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை.

ஈசன் மர அரிவு ஆலை
கட்டப்பாலி வீதி,
ஆனைக்கோட்டை.

ஐ.வரதராசா
ஸ்ரீ முருகன் கபே
மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மலர் அமைப்பு: [illegible]ளர், பொன். கனகரத்தினம் (J.P.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் குடியேற்றம் மீள்வாழ்வளிக்குமா?

திருகோணமலை மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டு ஏற்பட்ட உள்நாட்டு பிரச்சினைகள் காரணமாக இடம்பெயர்ந்த மூதூர் மற்றும் ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் 2007 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து நடைபெற்று வருகின்றது. இதில் முக்கியமாக பள்ளிக்குடியிருப்பு மற்றும் பாட்டாளிபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இவ்வருடம் மே மாதம் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

மீள்குடியேற்றப்பட்டு 2 மாதங்கள் முடிவடைந்த நிலையில் தனக்கு இதுவரை எந்தவொரு நிறுவனமும் முன்வந்து வீடு ஒன்றைக் கட்டித்தரவில்லையென இங்கு மீள்குடியேற்றப்பட்டுள்ள குமாரசுவாமி கணேசமூர்த்தி என்பவர் கவலையுடன் தெரிவித்தார்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் 22 கிராம சேவையாளர் பிரிவுகள் காணப்படுகின்றன. இதில் 11 கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பிரச்சினைகள் காரணமாக இடம்பெயர்ந்திருந்தனர். இவர்களுள் தற்போது 3 கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இதேவேளை ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த அனைத்து மக்களும் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இங்குள்ள மக்கள் கடந்த வருடம் மீள்குடியேற்றப்பட்டுள்ள போதிலும் தற்போதும் சிலர் தற்காலிக குடியிருப்புகளில் வசித்து வருவதாக கருகாமுனையைச் சேர்ந்த கலைமகள் தெரிவித்தார். இது குறித்து கவலை வெளியிட்டுள்ள அவர் தனது வீட்டின் பகுதி சேதமடைந்துள்ளமையால் அந்த வீட்டிலேயே வசிக்குமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும் அதன் காரணமாகவே அவர்களுக்கு தற்காலிக வீடு வழங்கப்படவில்லை என்றும் கூறினார். இவ்வாறு பகுதி சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்கள் அனைவரும் தற்போதும் சேதமடைந்த வீடுகளிலேயே வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

பழைய வாழ்க்கைக்குத் தாம் எப்படி மீண்டும் திரும்புவது என்ற மனக்கவலை கலைமகளுக்கு மட்டுமன்றி இங்குள்ள ஒவ்வொருவருக்கும் இருப்பதை எம்மால் அவதானிக்க முடிந்தது. தமது பழைய நிலைக்குத் திரும்பவேண்டும், அவ்வாறாயின் என்ன செய்வது என்ற அவர்களின் மனதில் உள்ள கேள்விக்கு யாராலும் பதில் கூற முடியவில்லை.

இதேவேளை, சொந்த இடத்தைத் தவிர வேறு இடங்களுக்குச் சென்று தொழில் புரிவதிலும் இங்குள்ள மக் கள் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். தாங்கள் தங்கியுள்ள இடம் மற்றும் பணிபுரியவுள்ள இடம் போன்ற விவரங்கள் அடங்கிய படிவத்தில் கிராம சேவகரினதும் மேலதிக மாவட்ட செயலாளரினதும் கையொப்பங்கள் பெறப்பட்டால் மட்டுமே வெளியிடங்களில் இவர்கள் தொழில்புரிய முடியும் என்ற புதிய விதிமுறை இங்கு நடைமுறையில் இருக்கின்றது.



இந்த நடைமுறை காரணமாக தங்களால் வெளியிடங்க ளுக்குச் சென்று தொழில் புரிவதற்கு இயலாதிருப்பதாக சூரநகரை சொந்த இடமாகக் கொண்ட சுவேந்திரன் வாணி குறிப்பிட்டார்.

மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு உதவிகளைச் செய்வதில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்க ளிப்பு அளப்பரியது. அந்த வகையில் மீள்குடியேற்றப்பட்ட பாட்டாளி புரத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஐ.ஓ.எம் நிறுவனம் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுத்து வருகின்றது.

அதன் முதற்கட்டமாக பாட்டாளிபுரத்தில் ஐ.ஓ.எம் நிறுவனத்தின் மூலம் 48 வீடுகள் தற்போது கட்டி முடிவடையும் நிலையில் உள்ளது. தொடர்ந்து புதிதாக மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க தமது நிறுவனம் தயாராக இருப்பதாக திருகோணமலை ஐ.ஓ.எம் நிறுவனத்தின் தலைமை அதிகாரி ஜீவானந்தம் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்றுவரும் இந்தக் காலப் பகுதி யில் அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவி கள் மீள்குடியேற் றறப் பட்ட மக்களுக்கு கைகொடுத்து வருகின்றது. மீள்குடியேற்றம் இம்மக்க ளின் வாழ்வை மீளக் கட்டியெழுப்புமா?

**நன்றி: மீண்டும் வாழ்வோம் (Inter News)**


**காணி விற்பனைக்கு**

வட்டப்பாதி தம்பசிட்டியில் அமைந்துள்ள நிலப்பரப்பு 02 வீடுகட்ட உகந்த நாற்சதுரக் காணி விற்பனைக்குண்டு. ஒவ்வொரு பரப்பாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: இராமசாமி பத்மராஜன்
'செல்வப் பிரஷ்தம்' கொல்வதாடி,
வதிரி, கரவெட்டி.


சுழிபுரம் வடக்கு, சோழிபுரம் அருள்மிகு
**சம்பு நாகேஸ்வரபதி சுயம்பு நாதேஸ்வரி சமேத சுயம்பு நாதலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்**
ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தண பஞ்சகுண்ட பகஷ

**மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

31.08.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கர்மாரம்பம்
02.09.2008 செவ்வாய்க்கிழமை பி.ப.12 மணி முதல் 03.09.2008 புதன்கிழமை பி.ப.12 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்.
04.09.2008 வியாழக்கிழமை காலை 5.30 - 6.30 மணிவரை மஹாகும்பாபிஷேக குடமுழுக்கு நடைபெறும்.

பிரதிஷ்டா குருமார் விவரம்:
வழக்கம்பரை அம்மன் தேவஸ்தான பிரதமகுரு
ஆகமக் கிரியாஜோதி சிவஸ்ரீ மு.சுப்பிரமணிய சுந்தரராஜக் குருக்கள்
தலைமையில் குருவருள் ஆசியுடன் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு:
சிவாகம கிரியா கலாபூஷணம், சாதக இளவரசு சக்தி உபாஷகர்
சிவஸ்ரீ மு.சு.சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள்
*(வழக்கம்பரை அம்மன் தேவஸ்தானம்)*

பரிபாலனசபை.


**SPOKEN ENGLISH DAY BY DAY**

12 வார கால பயிற்சி நெறி
VCD/DVD/ CD - ROMS TICK - SOFT விற்பனையில்
பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிவோர், வெளிநாடு பயணம் செல்வோர், ஆங்கில மொழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மிகவும் உகந்தது.
*பின்வரும் புத்தக நிலையங்களில் பெறலாம்*
பூபாலசிங்கம் - யாழ். அன்னை - யாழ். ஆல்சிலோன் -யாழ்.


## பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு

யாழ்ப்பாணம்,ஓக.28

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் இதுவரை பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்யாத குடும்பங்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் தத்தமது பிரிவு கிராம சேவை அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு மீளாய்வை மேற்கொள்ளுமாறு காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் கேட்டுள்ளார். (202)


**IDM** இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக்கல்லூரி
**www.idm.lk**
After A/L
புதிய பிரிவுகள் ஆரம்பம்: (வார, வார இறுதி நாள் வகுப்புக்கள்)

**BTEC Diploma Courses - UK**
*(International Diplomas - Edexcel International - UK)*
- Diploma in Business Management
- Diploma in ICT
- Diploma in Computer & Network Technology
- Diploma in Computerized Accounting Packages
- Diploma in Electrical & Electronic Engineering

**Other Courses**
Ms Office, ICDL, vb.net, Java, PHP & MySQL,Web sining
**kids program**
சிறுவர்களுக்கான பயிற்சி நெறி - 4 வயது முதல் இணைந்து கொள்ளலாம்.

மாணவர்களுக்கு சர்வதேச தரத்துடனான சான்றிதழ்களை வழங்கும் நோக்கில் எம் நிறுவனம் உலகில் உள்ள பின்வரும் பிரபல்யமான நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**Affiliations**
1) An institution coming under the Council for Information Technology (CINTEC) Ministry of Science and Technology.
2) A Training center approved by the Tertiary and Vocational Education Commission.
3) The first ISO 9001 : 2000 Certified IT Training Institution in Sri Lanka.
4) The Proud owerns of the country's first ICT Training Institution.
5) The developers of the curriculum for ICT Training forVocational Training Institution's under SEMP ministry of Education Sri Lanka.
6) A member of the Association of ComputerTraining Organizations (ACTOS).

**University Affiliations**
- London Metropolitan University -UK
- Wolverhamption University -UK
- Northumbria University -UK
- University of Portsmouth -UK
- Charles Sturt University - Australia
- City of London College -UK
- The University of Greenwitch-UK
- University of Sunderland -UK
- Holmesglen Institute - Australia
- University of Moratuwa - Partner organization for collab ration provision of the BIT E ternal Degree Program.

**IDM Business Partners**
Australian Computer Society (ACS)
British Computer Society (BCS)
NCC Education Center - UK
Edexcel International - UK

216 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மூளாமலை ஒழுங்கை, மானிப்பாய்.
கொடிகாமம் வீதி, நெல்லியடி.


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் கந்தசாமி நகுலநாதன்**

மலர்வு:12.07.1978



உதிர்வு:04.09.2006

*திதி: துவாதசி (28.08.2008)*

எம்மைவிட்டு நீர் பிரிந்து சென்றீராண்டுகள்
எமக்கு விட்டுச் சென்றீரெண்டு செல்வங்கள்
ஆறுதல் எமக்கில்லை நீரில்லாமல்
ஆரிடம் சொல்வோம் எங்கள் துயரினை

இல.414/ 5, கோயில் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



*திதி: அபரபக்க திரயோதசி (28.08.2008)*

மறைவு
09.09.2007

09.02.1954 - தோற்றம் - 03.01.1959

அமரர்கள்
**திரு.திருமதி சிங்கராசா இரஞ்சிதமலர்**

உள்ளத்தால் பொய்யாது உயர்ந்து நின்றீர்
உறவாடி எம்முடன் மகிழ்ந்திருந்தீர்
வெற்றிப் படிதனிலே நடக்க வைத்தீர்
வேண்டிய தெல்லாம் செய்து தந்தீர்
பல்லாண்டு எம்முடன் வாழ்வீர் என நினைத்திருக்க
பரம்பொருள் அவன் வேறொன்றை நினைத்துவிட்டான்
நிலையற்ற வாழ்வதனைப் புரியவைத்து
நிறைவான திருத்தாளை சப்பறத் திருநாளில் சென்றடைந்து
ஆண்டு ஒன்றும் கடந்து விட்டதே உம்
ஆத்மா சாந்திபெற இறைஞ்சுகிறோம் இறைவனையே...!

*இல.06, 2 ஆம் குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் கண்களுக்கு உண்மைகள் வெளிப்படாதவாறு அடிப்படை மனித உரிமை மீறல் வன்னியில் அரங்கேறுகிறது

## வன்னி அவலத்தை விளக்கி ஐ.நா. செயலாளருக்கு மகஜர்

கொழும்பு, ஓக.28

உலகின் கண்களுக்கு உண்மை வெளிப்படாதபடி அடிப்படை மனித உரிமை மீறல்கள் வன்னி மண் முழுவதும் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. எண்ணற்ற, திட்டமிடப்பட்ட தடைகள் உண்மையின் பாதையைக் குறுக்கறுத்து விதைக்கப்பட்டு உண்மை வெளிப்படுவதை உறுதியாக நசுக்குகிறது. பதிலாக நஞ்சுப் பொய்கள் இலகுவாக கட்டவிழ்த்து விடப்பட்டு பிரசாரப்படுத்தப்படுகின்றன.

வன்னி மக்கள் மீது அரசு கட்டவிழ்த்து விட்டுள்ள மனிதப் பேரவலத்தை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக் குழுவில் வன்னி அமைப்பு நேற்று முன்தினம் நடத்திய பேரணியின் பின்னர் ஐ.நா.செயலாளருக்கு அனுப்பி வைத்த அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வன்னிமீது நாசுக்காகத் திணிக்கப்பட்டுள்ள ஈவிரக்கமற்ற பொருண்மியத் தடையானது ஒரு லட்சத்து 70 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணமும் ஆறுதலும் கொடுப்பதற்கு அரக்கத்தனமான தடைக்கல்லாக உள்ளது.

தூரவீச்சு ஷெல்களாலும் பல்குழல் ஷெல் வீச்சுக்களாலும் விமானக் குண்டுவீச்சுக்களாலும் கடற்படையின் பீரங்கித் தாக்குதல்களாலும் வன்னிமண் அதிர்ந்து கொண்டே இருக்கின்றது. ஒரு மானிடப் பேரவலம் திட்டமிடப்பட்டு உலகின் கண்களுக்கு மறைக்கப்பட்டு வன்னி மண்ணில் வெடித்தெழும்பிக் கொண்டிருக்கின்றது.

போரை நடத்துவதற்கான ஜெனிவா நெறிமுறைகளை வைத்துவிட்டு தமது சக குடிமக்கள் என்ற மனிதநேய அக்கறை கூட இன்றி ஒரு ஆவேசமான, கொடூரமான போரை இலங்கை அரசும், அதன் படைகளும் வன்னி மீது நடத்திக்கொண்டிருக்கின்றன.

### வாழ்விடங்கள் மீது தொடர் செல்வீச்சுக்கள்

படையினர், கிராமங்கள் கிராமங்களாக ஷெல் வீச்சுக்களை நடத்தி பாரம்பரிய தாயகத்திலிருந்து பலவந்தமாக மக்களை ஓட ஓட விரட்டுகின்றனர். இடம்பெயர்வுகள் ஒரு தடவையல்ல, மீளவும் தொடர்கின்றன. ஓரிடத்திலிருந்து இடம்பெயர்ந்து மற்றோரிடத்தில் நிலை கொள்ளுமுன் அவர்கள் வாழ்விடங்கள் மீது ஏவப்படும் ஷெல்வீச்சு அவர்களை மீளவும் இடம்பெயர நிர்ப்பந்திக்கின்றன. மனிதாபிமானமற்ற இடம்பெயர்வுகள் இங்கு தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

மரங்களின் கீழும், பாதையோரங்களிலும் கொழுத்தும் வெயிலிலும், தூசிபடிந்த காற்றின் மத்தியிலும், கொட்டும் மழையினிலும் ஷெல் முழக்கங்களின் மத்தியிலும் மக்கள் அந்தரித்து அவலப்படுகின்றனர். குறைந்த எண்ணிக்கையிலான மக்களே பாடசாலைகளிலும், வழிபாட்டுத் தலங்களிலும், நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியிருக்கின்றனர்.

இல்லாமையின் மத்தியில் இந்த அப்பாவி மக்கள் எல்லோரும் சொல்லொணாத் துன்பங்களிடையே வாழ்ந்து வருகின்றனர். அரச நிறுவனங்களும், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும், பன்னாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும், நல் உள்ளம் கொண்டோரும் போற்றுதற்குரிய வகையில் இம்மக்களுக்கு உதவிகளை வழங்கியபோதும், இம்மக்களின் அடிப்படை மனிதத் தேவைகளை நிவர்த்தி செய்ய அவை போதுமானதாக இல்லை.

இம்மக்களின் தேவைகளை நிறைவேற்றத் தேவையான எல்லாவற்றையும் அனுமதிப்பதாக அரசு பறைசாற்றுகின்ற போதும், அடிப்படைத் தேவைகளான கூரை விரிப்புக்கள், நீர்க்கொள்கலன்கள், எரிபொருள்கள், மருந்துப் பொருள்கள், உணவுவகைகள் போன்றவற்றை சோதனைச் சாவடிகளில் கடும் வெட்டுக்குட்படுத்தியே அனுமதிக்கின்றது.

மேலும், பன்னாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் நடமாட்டங்கள் மீது இறுக்கமான கட்டுப்பாடுகளைத் திணித்ததன் மூலம், அவர்களின் மனிதநேயப் பணிகள் இடம்பெயர்ந்துள்ள மக்களைச் சென்றடைவது முடக்கப்பட்டுள்ளது.

முதியோர்கள், நோயாளிகளுடன் கர்ப்பிணிப்பெண்களும், பாலூட்டும் தாய்மாரும், குழந்தைகளும் இடப்பெயர்வுகளால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### மாணவர்களின் கல்வி மோசமான நிலையில்

பாடசாலை செல்லும் சிறார்கள் சொல்லொணா நெருக் கடிகளுக்கும், கசப்பான சூழ்நிலையில் உளவியல் தாக்கங்களுக்கும் உள்ளாகி இருக்கின்றனர். இத்தகைய பாரதூரமான சோகநிலையில் தற்போது நாடளாவிய ரீதியில் நடைபெற்றுவரும் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நிலைமையை எண்ணிப் பாருங்கள்.

வளர்ந்தபிள்ளைகளின்நிலையே இப்படியெனில், கடந்த 17 ஆம் திகதி ஓகஸ்ட் மாதம் 2008ஆம் ஆண்டு நாடளாவிய புலமைப் பரிசில் தேர்விற்குத் தோற்றிய பிஞ்சுகளின் பரிதாப நிலையை எண்ணிப்பாருங்கள்.

மருந்துப் பொருள்களின் தட்டுப்பாட்டினால் தொற்று நோய்கள் மக்களை அச்சுறுத்துகின்றன. குடிதண்ணீர் இங்கு அருகிச்செல்லும் பொருளாகியுள்ளது. இந்த அப்பாவி மக்கள் கடும் நெருக்கடியின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

### நாசுக்காகத் திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையால் ஒரு லட்சத்து 40 ஆயிரம் மக்கள் நிர்க்கதியான நிலையில்

அப்பாவித் தமிழ் மக்களின் பயங்கரமான இந்நிலையை பக்கச்சார்பின்றி வெளிக்கொணரும் வாய்ப்பை - ஊடகத்துறையினரை வன்னிக்குள் நுழைய விடாது தடுத்து நிறுத்தி மறுப்பதே அரசின் நீண்டகால அடக்குமுறை வன்முறையின் மிகக் கொடூரமானதும் தந்திரமானதுமானதுமான நகர்வாகும்.

காலத்தின் அழைப்பு அவசரமானது. வன்னி மக்களை சாவிலிருந்தும், அழிவிலிருந்தும் மனித மாண்பு சிதைக்கப்படுவதிலிருந்தும் காப்பாற்றுங்கள். இதுவே உலகிலுள்ள நல்மனம் கொண்ட அனைவருக்கும் நீதி சமாதான வன்னி ஆணைக்குழு விடுக்கும் ஆத்மார்த்தமான வேண்டு கோளாகும் - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய ஆதரவுடன் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று வயலின் இசைக்கச்சேரி இடம்பெறும்.

வயலின் - ஆர்.இராதா கிருஷ்ணன், கே.குகபரன், செல்வி யோ. கார்த்திகா, மிருதங்கம் - எஸ். துரைராசா, முகர்சிங் - என்.சதீஸ்குமார், தபேலா - சதாவேல் மாறன், கடம் - என்.மாதவன்.

* * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் பெருந்திருவிழாக் காலங்களில் நாவலர் மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று வியாழக் கிழமை 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்னும் தலைப்பில் சிதம்பரநாதன் சசீவன் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

சுழிபுரம் ஜெகஜோதி அறநெறிப் பாடசாலை, கோப்பாய் சித்திர வேலாயுதர் கோயில் அற நெறிப் பாடசாலை, சங்கானை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

* * *

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு சைவமகாசபையின் ஏற்பாட்டில் நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்தி வரும் 'கந்தபுராணம்' தொடர் சொற்பொழிவில் இன்று சிங்கமுகாசூரன் போர் என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

## இயந்திரம் திருத்தும் தொழிற்பயிற்சி நிலையம்

வடமராட்சி,ஓக.28

வடமராட்சி வடக்கில் வெளி இணைப்பு படகு இயந்திரம் திருத்துவதற்கான தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கப்படவுள்ளது.

நெக்டப் திட்டத்தின் கீழ் கடற்றொழிலாளர்களின் வசதி கருதி இப்பயிற்சி நிலையம் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. (202-236)




# நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



*பொல்லாப்பிங் கில்லையென்று போதனை செய்வான்*
*புகழ்ச்சியு மிகழ்ச்சியு மொன்றாகக் காண்பவன்*
*செல்லப்ப னென்னுந் திருப்பெய ருடையான்*
*சிங்கார நடையொடு சிரிப்பினை யுடையான்.*

- யோகர் சுவாமிகள்.

### எமை காக்கச் சொல்லு!

கட்டழகு தமிழ்த்தாயே! நீ பெற்றெடுத்து
கன்னலெனும் பாலூட்டி வளர்த்த மைந்தன்
பட்டழகு மயில் மீது ஏற்றி வைத்தாய்
பார்புகழ பவனி வருகின்றானன்றோ?
இட்டமுடன் உன்மடியில் உறங்கியவன்
இனிய இருமங்கையரை மணந்த போதும்
மட்டற்ற பற்று உன்மேல் வைத்ததாலே
மறவாது தமிழரெமை காக்க வென்றே
கட்டழகன் நல்லையிலே தங்கி நின்று
காக்கின்றான் தமிழரெமை கை வேலினாலே!
கிட்ட வந்து முத்தமொன்று தருவானாகில்
கெட்டொழிந்து போகாமலெமை காக்கச்சொல்லு!

- விகடகவி.

### நான்மறைய அருள்தருவாய்

நான்மறையை நாமுணர நன்குரைத்த
நல்லூரின் வடி வேலவனே!
நான் மறைய நல்லருள் தந்திடுவாய்
நல்லூரின் வடிவேலவனே
நான் முகற்கு நற்பாடம் நன்குணர்த்திய
நல்லூரின் வடிவேலவனே
நாற்புறமும் நல்லமைதி கிட்டிடவே
நன்கெழுந்து வந்திடுவாய் நல்லூரின்வேலவனே!

சிவபாதசுந்தரம் கஜானன்.

### நலம் தரும் நல்லூரான்

*நல்லூர் வேலன் நலங்கள் தருவான்*
*வல்லமை தந்து வாழ்வைக் காப்பான்*
*சூரனை வதைக்க வேலொன்று தந்தாய்*
*சுந்தர தமிழாய் சுவைபட நின்றாய்!*

*அன்புக்கு ஏங்கும் ஆயிரம் உள்ளம்*
*அமைதியை தரவே அழகாய் வருவாய்*
*வாழ்வுக்கு ஏங்கும் வளம் இழந்தோர்கள்*
*வாழ்க்கை மலர வரங்கள் தருவாய்!*

பொ.சகலகலாநிதி (அச்சுவேலி).

### யாதும் நிறைவேறும்

ஆடும் மயிலேறிவரும் முருகன் புகழ்பாடிடவே
வாடும் எம்மினத்தின் துயரனைத்தும் நீங்கிடுமே
பாடும் இசையினிலே மனமுருகித் தாழ்ந்து பணிந்திடவே
வாழும் வழிதெரியாதோருக்கு வழி பிறக்கும் தப்பாமலே
நாடும் பக்தர்களின் கண்ணீரைக் கண்டிடவே
வீடும் தேடிவந்து எம் குறைகள் தீர்த்திடுவான்
ஓதும் எம்குறைகள் தினமுமவன் காதில் ஒலித்திடவே
தேடும் சாந்தி சமாதானம் நிரந்தரமாய்த் தந்திடுவான்
யாதும் நிறைவேறும் நாம் நல்லூரானை நாடிடவே.

சி.காசிப்பிள்ளை (கொடிகாமம்).

### மாட்சிமையைத் தாருமையா

*நல்லைநகரில் குடிகொண்ட*
*உமையவளின் மைந்தா - அன்று*
*மாங்கனிக்காக பெற்றோரைப் பிரிந்து*
*பழனிப்பதியதனில் ஆண்டியானாய்*

*அலங்காரக் கந்தனாகி*
*அடியவர்களுக்கு அருளாட்சிசெய்து*
*ஆறுமுகத்துடன் வீற்றிருந்து*
*ஆறுதலைத் தருகின்ற வேலா!*

*இன்னல்கள் நிறைந்ததிந்த*
*இலங்கை நாடதனில்*
*மக்கள் துயர் துடைத்து*
*மாட்சிமையைத் தாருமையா!*

ராதிகா சிவபாலசிங்கம் (பொலிகண்டி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களை வழிப்படுத்தும் பொறுப்பு

## பெற்றோருடையது



ஒரு பிள்ளை எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்பதிலே மற்றெல்லோரையும் விட பெற்றோரே அதிக பங்கு வகிக்கின்றனர். எனவே இன்றைய இளைஞர்களைச் சரியான திசையை நோக்கி வழிப்படுத்தும் பொறுப்பு பெற்றோருடையதேயாகின்றது. ஆசிரியர்கள் வெறும் கல்வியை மட்டுமே இளந்தலைமுறைக்கு ஊட்டுகின்றனர். ஆனால் நற்பண்புகளையும், சமூக நடத்தையையும் பெற்றோரை முன்மாதிரியாகக் கொண்டே இளைய தலைமுறை உள்வாங்கிக்கொள்கின்றது. சில இளைஞர்கள் தாம் ஊடாடுகின்ற நண்பர்கள் மூலம் சிலவேளைகளில் பிழையான திசைக்குச் செல்ல முற்படலாம். அப்போதெல்லாம் அவற்றை இனங்கண்டு, அதனால் ஏற்படும் பின்விளைவுகளைச் சரியானபடி தெரிவித்து, பிள்ளைகளைச் சீர்நடத்தையாளர்களாக்க பெற்றோர் முயல வேண்டும். பெற்றோரின் சொல்லையும் மீறி மீண்டும் மீண்டும் தவறான வழியில் பிள்ளைகள் நடக்க முற்படுமானால், தம் பிள்ளைகளைப் பெற்றோர் தண்டிப்பதிலும் தவறில்லை. என்றாலும் பெரும்பாலான பிள்ளைகள் பெற்றோரின் அருகிருப்பு போதியளவில் இல்லாத காரணத்தாலேயே தடம் மாறிச் செல்கின்ற சம்பவங்கள் நேர்கின்றன. எனவே தமது பிற வேலைகளை விடவும், தமது பிள்ளைகள் மீதான கரிசனை வெளிப்பாட்டிற்காகப் பெற்றோர் அதிக நேரம் ஒதுக்க வேண்டும்.

என்னதானிருந்தாலும் பிள்ளைகளைப் பொறுத்தவரை ஆசிரியர் என்பவர் ஒரு அந்நிய மனிதரே. அவரிடம் தமக்குள்ள பிரச்சினைகள், தேவைகள் என்பவற்றை இளந்தலைமுறையினர் வெளிப்படுத்துவதென்பது சாத்தியப்பாடற்ற விடயமாகும். எனவே இளந்தலைமுறையினர் தமது எண்ணக்கிடக்கைகளை பெற்றோரிடமே கொட்டித் தீர்க்க முயல்வர். அப்போதெல்லாம் அவர்களுக்கு நம்பிக்கைதரும் வார்த்தைகளோடு, பிரச்சினைக்கான சரியான தீர்வினையும் பெற்றோர் முன்வைக்க வேண்டும். இவற்றின் மூலம் நல்லவழியிலே இளந்தலைமுறையினரைப் பெற்றோர் வழிப்படுத்த முடியும்.

பா.தினேஷ்
*வணிகப் பிரிவு (2009),*
*உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி.*




## ஆசிரியர்களுடையது

இன்றைய நவீன உலகிலே ஆசிரியர் வழிகாட்டல் என்பது சிறப்பிற்குரியதொன்றாகும். அதாவது யதார்த்த உலகிலே அன்பை வளர்ப்பவர்களாக பெற்றோர்களும் பண்பை வளர்ப்பவர்களாக ஆசிரியர்களும் விளங்குகின்றனர். இவ்வாறு ஆசிரியர்களின் ஆழ்ந்த நெறிப்படுத்தலின் காரணமாகவே தமது அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளை இளைஞர்கள் நிறைவு செய்கின்றனர். இளைஞர்களை நெறிப்படுத்துவதில் பெற்றோரை விட ஆசிரியர்களின் பங்கே பெருமை கொள்ளத்தக்கது. அதாவது ஒவ்வொரு மாணவரும் குருவுக்குப் பணிதல் என்ற சிரத்தை உணர்வு கொண்டவர்கள். இதனால் குருவின் நெறிப்படுத்தலின் படியே செயற்படுகின்றனர். அத்தோடு ஆதிகாலத்திலே குழந்தைக்கு ஐந்து வயது நிரம்பியதும் குருகுலக்கல்விக்கு அனுப்பி வைப்பார்கள். இவ்வாறு ஆதிகாலத்திலே குருவிற்கு அருகில் சிரத்தையுடன் இருந்து கற்று, பணிவிடைசெய்து தமது கல்வியை மன வைராக்கியத்துடன் கற்றனர். இதன் காரணமாக ஆசானிடத்திலே மிகுந்த பற்று ஏற்படுகின்றது. ஆசிரியர்களின் கருத்துக்கு மதிப்பளிக்கும் தன்மை மேன்மையடைகின்றது. இதனால் ஆசிரியரின் அறிவுரைகளும், நெறியாள்கையும் பசுமரத்தாணிபோல மனதில் ஆழப் பதிகின்றன. இதனால் அவர்கள் எம்மை நல்வழிப்படுத்துகின்றார்கள் என்ற மனோபக்குவம் உண்டாகின்றது. எனவே மாணவர் மனதிலே அழியா இடம் பிடித்த ஆசிரியர்களே இளைய தலைமுறையினரை நெறிப்படுத்துவதில் அதிக பொறுப்பு வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.



இ.ரிஷிதா,
2009 கலைப்பிரிவு, நயினாதீவு ம.வி.

# வரலாற்றில் இந்த வாரம்

### ஒகஸ்ட் 30




அணுவை முதன்முதலாகப் பிளந்து, வெற்றி கண்டவரான நியூசிலாந்தைச் சேர்ந்த விஞ்ஞானி 'ரதர்போர்ட்' 1871ஆம் ஆண்டு ஒகஸ்ட் 30ஆம் திகதி பிறந்தார். அணுக் கோட்பாட்டையும் இவரே அறிவித்தார்.

### ஒகஸ்ட் 31



மலேசியா நாடு 1957ஆம் ஆண்டு ஒகஸ்ட் 31இல் தான் சுதந்திர நாடாக மாறியது. அப்போது மலேசியாவை ஆண்ட கிளெளகெஸ்டர் பிரபு, 'துங்கு அப்துல் ரகுமான்' என்பவரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார்.

### செப்ரெம்பர் 1




உலகிலுள்ள சிறுவர்களின் மனங் கவர்ந்த 'டார்ஜன்' என்ற கதாபாத்திரத்தை சிருஷ்டித்தவரான, எட்கார் ரைஸ் பர்ரோஸ் என்ற எழுத்தாளர் 1875ஆம் ஆண்டு செம்ரெம்பர் முதலாம் திகதி பிறந்தார்.

### செப்ரெம்பர் 2




பௌதீகத்துக்கான நோபல் பரிசை 1968இல் பெற்ற 'லூயி டபிள்யூ அல்வாரஸ்' என்ற விஞ்ஞானி தனது 77ஆவது வயதில் 1988ஆம் ஆண்டு செப்ரெம்பர் 2இல் காலமானார்.

### செப்ரெம்பர் 3

2ஆம் உலகப் போரின்போது ஜேர்மனி மீது பிரிட்டனும் பிரான்ஸும் போர்ப்பிரகடனத்தைச் செய்தது 1939ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3ஆம் திகதியில் ஆகும்.


இரண்டாம் உலக யுத்தத்தின்போது...

# கவிதை புனைவோம்

## எதிர்கால ஆசை

சோலைத் தென்றல் எம்
சாலைகளில் வீசிட ஆசை
சோகமிறந்து எம் மனங்கள்
சிரித்து மகிழ்ந்திட ஆசை

பாணின் விலை
பாதியாகி விட ஆசை- இப்
பாரினில் மக்கள்
பஞ்சம் ஒழிந்து விட ஆசை



ஏ-9 பாதை
திறந்திட ஆசை- எம்
ஏக்கங்கள் எல்லாம்
பறந்திட ஆசை


தேசத்தின்
எல்லையெங்கும்
தேடல் கொள்ள ஆசை
பழைய எம் யாழ்.மண்ணைப்
பார்த்து விட ஆசை

உயர் வலயங்களிலுள்ள எம்
உறைவிடம் செல்ல ஆசை
ஊரடங்கு இன்றி - நாம்
ஊர் சுற்றி வர ஆசை

நித்தம் நித்தம் நெஞ்சத்தில்
நிறைகின்ற ஆசையெல்லாம்
நிறைவேறிடுமா
நிஜத்தில்...?

செல்வி ஜெனிஸ்ரெலா செல்வத்துரை, மல்லவம், உடுவில்.

# முயன்று பாருங்கள்




படத்தில் காட்டியுள்ளது போல முதலாம் கோலில் உள்ள உருளைகளை அதே ஒழுங்கில் 3ஆம் கோலுக்கு மாற்றவேண்டும். ஆனால் ஒரு தடவையில் ஓர் உருளையை மட்டுமே அசைக்கலாம். மேலும் ஓர் உருளை மீது அதைவிடப் பெரிய உருளையை வைக்கவே கூடாது.

இந்நிபந்தனைகளுடன் இயலுமான அளவு குறைந்த அசைவுகளைப் பயன்படுத்தி முதலாம் கோலில் உள்ள உருளைகளை 3ஆம் கோலுக்கு மாற்றமுடியுமா? முயற்சி செய்து பாருங்கள். விடை தெரியாவிட்டால் கீழே உள்ள விடைகளைப் பார்த்து சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

C ⟶ 3
B ⟶ 2
C ⟶ 2
A ⟶ 3
C ⟶ 1
B ⟶ 3
C ⟶ 3

வி.சிந்துஜா,
34, நாயன்மார் வீதி,
நல்லூர்

# ஆயுள்



பூக்களைப் பார்த்துப்
பூரிப்படை - அதன்
புன்னகை உள்ள
ஒருநாள் வாழ்வை
நினைத்து...!

செ.தனுஷன்,
கோண்டாவில்.




## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும்* **'இளவல்கள் வட்டம்'** *என்ற புதிய பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# தலையெழுத்தைத் தீர்மானிக்கும் கையெழுத்து

'ரோபட்டோ ஸ்ரட்' இயந்திரங்களே தற்போது அதிகம் படிக்கின்றன. மனிதன் இயந்திரத்தைப் படைக்கின்றான் அழகாக இருப்பதற்காக. ஆனால் மனிதன், அழகாக எழுதக்கூடிய ஒரு மனிதனை உருவாக்குவதற்காக மிகவும் கஷ்டப்படுகின்றான். அறுபது, எழுபது, எண்பதுகளில் கையெழுத்து என்பது ஒருவனுடைய ஆளுமையில் பிரதான பங்களிப்பைச் செய்துவிட்டதன் பலனாகவே, இப்பொழுது அவர்களது எச்சங்களைப் பார்த்துப் பசியாற முடிகிறது. எப்படியும் எழுதலாம், எதுவும் செய்யலாம், பிழைவிட்டு எழுதலாம், கிறுக்கியும் எழுதலாம் என்ற தெய்வு எப்போது ஏற்பட்டதோ அப்போதே நவீன சாதனங்கள் உயிர் பெறத் தொடங்கிவிட்டன. ஆட்சியும் பெற்றுவிட்டன. ஆஸ்திரேலியாவில் பேனா பிடித்து எழுதத் தெரியாத ஒரு பெரிய கல்விச் சமூகமே தோன்றியுள்ளதை அவசரமாகப் புரிந்திருப்பதன் விளைவாக, அவசியம் பேனா பிடித்து எழுதவேண்டிய தேவையையும், சேவையையும் முன்னெடுத்திருக்கின்றார்கள். மேலும் "மாணவர்களின் திறமை அவர்களது கையெழுத்துக்களில் பளிச்சிட்டு அவர்களை எடை போடவும் உதவும்" எனக் கூறியிருப்பது யாவரும் நோக்கத்தக்கது. கடிதம் எழுதியவர்களுக்குப் பதில் கடிதம் எழுதக்கூடிய பண்பு அற்றுப் போய்விட்டது. காரணம் ரைப்பிங் செய்பவர் லீவு. மின்சாரம் இல்லை, ஏ-சி வேலை செய்யவில்லை. எழுதுவினைஞர் இடமாற்றம். இவ்வாறு சமாதானம் சொல்லப்படுகிறது. இந்த நிலைமை இங்கு மட்டுந்தான் என்று கருதி விடாதீர்கள். உலகம் முழுவதும் இது பொருந்தும்.

கே.எஸ்.சிவஞானராஜா,
கொக்குவில்.

1981ஆம் ஆண்டு எனது உறவினர் ஒருவருக்குப் பதிவுத்தபாலில் முக்கிய கடமை தொடர்பான விடயம் ஒன்றினை அனுப்பியிருந்தேன். முழுவதுமாக எனது கையெழுத்திலேயே எழுதியிருந்தேன். பதினைந்து நாள் கழித்து பின்னர் அந்த உறவினரைச் சந்திக்க நேர்ந்தது. மிகவும் சந்தோஷப்பட்டேன். காரணம் ஏற்கனவே நான் எழுதி அனுப்பிய கடிதத்தை வாசித்து உரிய நடவடிக்கை எடுத்திருப்பாரென்பதுதான். நான் முந்திக்கொண்டேன். "சேர்!.... நான் ஒரு கடிதம் அனுப்பியிருந்தேன். என்னுடைய கோவை [FILE] இன்னும் வந்து சேரவில்லை. நீங்கள்தான் எடுத்துத் தரவேண்டும்" என்றேன். அதற்கு அவர் கூறிய பதில் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. "தம்பி! நீங்கள் பதிவுத்தபாலில் அனுப்பிய கடிதம் கிடைத்தது. அதை நான் இன்னும் உடைக்கவில்லை. பார்க்கவுமில்லை! என்ன விடயம்..." என்று கேட்டபோது தான் சொந்த பந்த தாற்பரியம் மட்டு மல்ல, ஒரு கடிதத்திற்கு பதில் எழுதுவது என்பது முடியாத காரியமாகி விட்டது - என் ... [illegible]

பகுதி 2

[வளரும்]

# நாடும் நடப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பெரும் ஆப்பாக வருகின்றது ஐரோப்பிய ஒன்றிய அறிக்கை

இலங்கை நிலைமை குறித்து நேரில் ஆராய்வதற்காக அண்மையில் இங்கு வந்திருந்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவின் நகல் அறிக்கை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் அடுத்த மாதம் நடுப்பகுதியில் ஆராயவிருக்கின்றது.

அதன் பின்னர் இந்த அறிக்கை ஐரோப்பிய ஒன்றியப் பரிசீலனைக்காக ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகின்றது.

அண்மையில் இலங்கை வந்திருந்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழு, இங்கிருந்து புறப்பட முன்னர் தனது அவதானிப்புகள் குறித்துப் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் மேலோட்டமாகத் தகவல் வெளியிட்டிருந்தது.

அப்போது அப்பிரதிநிதிகள் வெளியிட்ட தகவல்களை - அவற்றுக்குரிய இராஜதந்திர மொழியில் அளவீடு செய்து பார்த்தால் - அவை, இலங்கை அரசுக்குக் கடும் பாதக மானவையாக அமைந்தன என்பதை அச்சமயமே ஊகித்தறிய முடிந்திருந்தது.

அதனால் இப்போது தூதுக்குழுவினர் ஐரோப்பிய ஒன்றியத்துக்குச் சமர்ப்பிக்க இருக்கும் - இலங்கை அவதானிப்பு தொடர்பான - அறிக்கை, இலங்கை அரசுக்கு மிகப் பாதிப்பானதாகவே அமையும் என்று பலரும் எதிர்பார்க்கின்றார்கள்.

எனவே, இந்த அறிக்கை, இறுதி செய்யப்பட்டு, அது ஐரோப்பிய ஒன்றியத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் சமயத்தில் அதை எதிர்ப்பதற்கான திட்டங்களை இலங்கை இப்போதே ஆரம்பித்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

இலங்கை நிலைமையை நேரில் கண்டறிவதற்காக ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் றொபேர்ட் இவான்ஸ் தலைமையில் இங்கு வந்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஈழத் தமிழர்களுக்குப் பக்கச்சார்பானவர்கள் என்றும் -

புலம்பெயர்ந்த நாடுகளில் வசிக்கும் ஈழத் தமிழர்களின் வாக்குகளில் ஐரோப்பிய நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்கான அவர்களது அரசியல் தலைவிதி தங்கியிருப்பதால் அவர்கள் ஈழத் தமிழருக்குச் சார்பாகவே - ஒருதலைப்பட்சமாகவே - செயற்படுகிறார்கள் என்றும் -

இலங்கை அரசு குறிப்பிட்டு, அதன்மூலம் இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளின் பக்கச்சார்பின்மையைக் கேள்விக்குள்ளாக்கி, இந்த விடயத்தைச் சமாளிக்கலாம் எனத் திட்டம் போடுகின்றது.

இந்தத் திட்டம் நிறைவேறுமா? இலங்கை நிலைமையைக் கண்டறிவதற்காகத் தான் அனுப்பிய பிரதிநிதிகள் குழுவின் நேர்மைத்திறம் குறித்து இலங்கை அரசு எழுப்பப்போகும் சந்தேகம் பற்றி ஐரோப்பிய ஒன்றியம் கவனத்தில் கொள்ளுமா? - என்பவை நியாயமான, ஆழமான கேள்விகளாகும்.

எது, எப்படியென்றாலும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கையிலிருந்து தைத்த ஆடைகள் போன்றவற்றை ஏற்றுமதி செய்வதற்கு விசேட, வரிவிலக்கு சலுகை வழங்கும் 'ஜி. எஸ். பி. பிளஸ்' உதவித் திட்டத்தை இலங்கைக்குத் தொடர்ந்து வழங்குவதா என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவில் - தீர்மானத்தில் - மேற்படி இலங்கைக்கு விஜயம் செய்த ஒன்றியத்தின் பிரதிநிதிகள் தமது விஜயம் குறித்தும் அவதானிப்புகள் குறித்தும் சமர்ப்பிக்கும் அறிக்கை முக்கிய இடத்தை வகிக்கும் என்பது உறுதி.

இந்த அறிக்கை, இலங்கை அரசுக்கு - கொழும்பு நிர்வாகத்துக்கு - பெரும் பாதிப்பாக அமைந்து, அதன் காரணமாக 'ஜி.எஸ்.பி. பிளஸ்' விசேட வரிச் சலு கையை இலங்கை பறிகொடுக்குமானால் வருடாந்தம் பத்தாயிரம் கோடி ரூபாவுக்கான ஏற்றுமதி வாய்ப்பை நிரந்தரமாக இழக்கும் நிலைமை இலங்கைக்கு ஏற் பட்டுவிடும்.

பொதுவாக இந்த வரிச்சலுகையை ஒரு நாடு தொடர்ந்து பெறவேண்டுமானால் அது சில அடிப்படை விவகாரங்களைப் பூர்த்தி செய்யவேண்டும்.

அவற்றுள் -

சுற்றுச் சூழல், தொழிலாளர் உரிமைகள், மனித உரிமைகள் போன்றவை தொடர்பான இருபத்தியேழு சர்வதேசப் பட்டயங்களை அந்த நாடு ஏற்றுக்கொண்டு, அதன்படி கடைப்பிடித்து ஒழுகவேண்டும் என்பது முக்கியமான கடப்பாட்டு விதியாகும்.

ஆனால் கொழும்பு அரசின் மனித உரிமைகள் பேணும் போக்கோ இன்று சந்தி சிரிக்கும் கேவல நிலைக்கு வந்துவிட்டது என்பது கண்கூடு.

இலங்கையில் ஆள்கடத்தல்கள், காணாமற் போகச் செய்தல், சட்டத்துக்கு முரணான படுகொலைகள் போன்றவை அச்சம் தரும் வகையில் அதிகரித்து மோசமான கட்டத்தை அடைந்திருக்கின்றமை சர்வதேசத்திடமிருந்து வர்த்தக சலுகைகளை இலங்கை தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்கு ஆப்பு வைத்துவிடும் என்பதை ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் ஏற்கனவே தமது இலங்கை விஜயத்தின்போது சூசகமாகச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஆனால் இந்த எச்சரிக்கையின் ஆழத்தைக் கொழும்பு நிர்வாகம் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. நாட்டில் மோசமடைந்து வரும் மனித உரிமை நிலைவரம் மேன்மை அடைவதற்கான வாய்ப்புகளே களத்தில் தென்படவில்லை.

அந்தப் பின்புலத்தில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கு வரும்போது இலங்கைக்கு அது பெரும் ஆப்பாக அமையும் என்பது நிச்சயம்.

# தமிழினத்தின் வரலாற்றை அழித்துவிட சிங்களப் பேரினவாதிகள் பகீரத முயற்சி

## பண்டாரவன்னியன் மலருக்கு வழங்கிய செய்தியில் பா.நடேசன்



தமிழரின் வரலாற்றை அழித்துவிடுவதில் சிங்களப் பேரினவாதிகள் பகீரத முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். இதனை முறியடிக்கத் தமிழரின் வரலாற்றை நூலுருவாக்கிப் பரப்புவது தமிழ் அறிஞர்களின் வரலாற்றுக் கடமையாகும் - என தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

வன்னி மன்னன் பண்டாரவன்னியனின் 205 ஆவது ஆண்டு சிறப்பு மலருக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:- வீரத்திற்கும் மானத்திற்கும் இலக்கணமாக இந்த மண்ணில் வாழ்ந்து காட்டிய மாவீரன்தான் பண்டாரவன்னியன்.

செவிவழிக் கதைகளுடன் கலந்து சொல்லப்பட்டு வந்த பண்டார வன்னியனின் வீரவரலாற்றை ஆவண நிரூபணங்கள் கொண்ட உண்மை வரலாறாக ஆக்கும் முயற்சி என்பது காலத்தின் தேவையாகும்.

இந்த வரலாற்றுத் தேவையை நிறைவேற்றும் பணியினை முல்லைத்தீவு மாவட்ட பண்டாரவன்னியன் அறங்காவல் கழகம் தனது கடமையாக எடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது.

தமிழரின் வரலாற்றை அழித்துவிடுவதில் சிங்களப் பேரினவாதிகள் பகீரத முயற்சிகள் எடுப்பதும் நாம் அறிந்ததே. தமிழரின் வாழ்விடங்களின் தொன்மைப் பெயர்களை அழித்து சிங்களப் பெயர்கள் சூட்டுவதும், தமிழரின் ஆவணக்காப்பகங்கள், நூலகங்களை எரித்து அழிப்பதும் தமிழரின் வரலாற்றை தமிழ் மாணவர்களின் பாடநூல்களில் இருந்து விலக்குவதும் என்று தமிழரின் வரலாற்றை அழிக்கச் சிங்களப் பேரினவாதிகள் முயற்சித்தபடியுள்ளனர்.

இதனை முறியடித்து தமிழரின் வரலாற்றை எமது சந்ததியினர் அறியும் வகையில் நூலுருவாக்கிப் பரப்புவது தமிழ் அறிஞர்களின் வரலாற்றுக் கடமையாகும். ஆங்கிலேயரின் ஆயுத பலத்திற்கு அஞ்சாமல் விடுதலை உணர்வுடன் போரிட்டவன்தான் மாவீரன் பண்டாரவன்னியன்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வீரத்துடன் அந்நியரை எதிர்த்துப் போராடிய அந்த மாவீரனது கதைகள்ளம்மைப் பெருமை கொள்ளவைக்கின்றன. அந்தப் போர்கள் நடந்த ஊர்களின் பெயர்களை உச்சரிக்கும்போது மனதில் உணர்வெழுச்சி பொங்கு கின்றது.

இதற் கெல்லாம் வரலாற்று உணர்வு தான் காரணம். வரலாற்று உணர்வென்பது மிகவும் சக்தி வாய்ந்தது. ஒரு இனம் தனது மண்ணின் பெருமைகளை உயர்விலை கொடுத்துக்காப்பதற்கும், வளர்ப்பதற்கும் இந்த வரலாற்று உணர்வுதான் காரணமாக இருக்கின்றது.

பண்டாரவன்னியன் போன்ற இந்த மண்ணின் வீரப்புதல்வர்களது வரலாறுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டும். அந்த வீரவரலாறுகள் எமது எதிர்காலச் சந்ததிக்கு விடுதலையுணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும் - என்று குறிப்பிட்டுள்ளார்.

# போர் மற்றும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களுக்கு கற்கோவளத்தில் நிரந்தர வீடுகள்

## கியூடெக் நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளது

யாழ்ப்பாணம், ஓக.28

போர் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து வாழும் 70 குடும்பங்களுக்கு கற்கோவளம் புனித நகரில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட இவ்வீடுகள் அடுத்த மாத நடுப்பகுதியில் பயனாளிகளிடம் கையளிக்கப்படும் என நிறுவன இயக்குனர் அருட் தந்தை சி.யே. ஜெயக்குமார் தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இன்பருட்டி, சக்கோட்டைப்பகுதிகளில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கென 200 வீடுகள் எமது நிறு வனத்தால் அமைக்கப்பட்டு வழங்கப்படவுள்ளன.

'செடக்' நிறுவனத்தின் நாற்பதாவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடும் விழாவை அடுத்த மாத இறுதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விழாவின் ஆரம்ப நிகழ்ச்சியாக இளைஞர், யுவதிகளுக்கிடையேயான பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் இடம்பெயர்ந்த மக்கள் தங்கி வாழும் சக்கோட்டை, இன்ப ருட்டி, கற்கோவள பகுதிகளில் நடை பெற்று வருகின்றன-என்றார். (202-302)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் 3 விடுதிகள் முப்பது லட்சம் ரூபா செலவில் புனரமைப்பு

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, வைத்தியசாலையின் மூன்று நோயாளர் விடுதிகளைச் சுமார் 30 இலட்சம் ரூபா செலவில் திருத்தி புனரமைத்து நோயாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கான நிதி உதவிகளைப் புலம்பெயர்ந்து வாழும் மக்களும் உள்ளூரில் வாழும் மக்களும் வழங்கியுள்ளதாக வைத்தியசாலை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

சத்திர சிகிச்சைப் பெண்நோயாளர் விடுதி, பொது வைத்திய பெண் நோயாளர் விடுதி, சிறுவர் விடுதி ஆகிய மூன்று விடுதிகளையுமே அபிவிருத்திச்சபை திருத்திப் புனரமைத்துள்ளது. இவ் விடுதிகளுக்கு மின்னிணைப்பு வசதிகள் நவீன மயப்படுத்தப்பட்டு மாபிள்கள் பதிக்கப்பட்டு சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் வைத்தியசாலையில் தீராத நோயாளர்கள் விடுதி ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தீராத நோயால் பீடிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் இனிமேல் இத்தீராத நோயாளர் விடுதியிலேயே அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்படும். இதனால் தீராத நோயாளர்களுக்கும் ஏனைய நோயாளர்களுக்குமான பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகான வசதி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சத்திர சிகிச்சை ஆண் நோயாளர் விடுதி, பொது வைத்திய ஆண் நோயாளர் விடுதிகளையும் சுமார் 40 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளையும் அபிவிருத்திச்சபை மேற் கொண்டுள்ளது. (50-218)

# யாழ்.தீயணைப்புச் சேவையை சீரமைக்க அமைச்சர் டக்ளஸ் துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.28

யாழ்ப்பாணத்தில் தீயணைப்பு சேவையை மறு சீரமைத்து மேம்படுத்துவதற்கு சமூக சேவைகள் நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.மாவட்டத்தில் தற்போது யாழ்.மாநகரசபையிடம் மட்டுமே தீயணைப்புச் சேவைப்பிரிவு இருக்கின்ற போதிலும் அச்சேவையானது முழுமையாக செயற்படப் போதிய வளங்கள் இல்லாத நிலைமை சுட்டிக்காட்டப் பட் டுள்ளது.

கனேடிய உதவித்திட்டத்தின் கீழ் 1988 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட தீயணைப்பு இயந்திரம் உரிய உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

மேற்படி விடயம் தொடர்பாக யாழ். அரசாங்க அதிபரினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்படி ஒரு தீயணைப்பு இயந்திரம், இரண்டு மீள் உறிஞ்சி கொள்கலன்கள், இரண்டு தண்ணீர் தாங்கிகள் மற்றும் தீயணைப்பு இயந்திரத்திற்குரிய ஒரு தொகுதி உதிரி உபகரணங்கள் என்பன உடனடியாக தேவையாக உள்ளன. இவற்றிற்கு மேலதிகமாக மின்பிறப்பாக்கி ஒன்றும் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய தேவையும் அவசியமாகின்றது.

யாழ்.பொதுமக்களினாலும் வர்த்தகர்களினாலும் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய யாழ்.தீயணைப்பு சேவையின் அவசியம் குறித்து கூடிய அவதானம் செலுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்கவுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்றுள்ளது. (50)

## நாளை

ஆவணி 13 29.08.2008
வெள்ளிக்கிழமை
திதி: சதுர்த்தசி
பி.இ. 3.20வரை
நட்சத்திரம் : ஆயிலியம்
பி.இ. 02.26 வரை
சுபநேரம் : 06.05-07.35
ராகுகாலம் : 10.35-12.05

# வாழ்க்கை ஒரு கால்பந்தாட்டம்

*மாணவர்கள் கால்பந்தாட்டம் ஆடுகிறார்கள். எவ்வளவு காலம் உங்களால் விளையாட இயலும்? பந்தைக் காலால் உதைக்கிறீர்கள். பந்தில் காற்று இருக்கும் வரை அது உதைகளைத் தாங்கும். காற்று முழுவதும் காலியாகி விட்டால் அது சுருங்கி விடும்.*

*வாழ்க்கையும் ஒரு கால்பந்து ஆட்டம். ஒரு பக்கம் நல்லியல்புகள் ஆறு, மறு பக்கம் கெட்ட இயல்புகள் ஆறு. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் எனப்படுபவை. சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை, பிரகிருதி எதிர்ப்புறம் உள்ள நல்லியல்புகள். இரண்டு கம்பங்களுக்கிடையே உள்ளதே இலக்கு. இந்த இரு கம்பங்களுக்கிடையே பந்து சென்றால் அதுவே இலக்கு எனப்படும். வாழ்க்கை என்னும் இலக்கு, உலகியல் அறிவ, ஆன்மீக அறிவ இவற்றிகிடையே உள்ளது. தர்மவித்யா, பிரம்மவித்யா. இவற்றை விட்டு விலகிச்செல்வது தோல்வியாகும். இவற்றிலிருந்து விலகிச்செல்லும்போது புனரபிஜனனம், புனரபிமரணம், மறுபடி பிறப்பு, மறுபடி இறப்பு என்றாகும். இவற்றிற்கு இடையே சென்றால் புனர்ஜன்மம் ந வித்யதே மறு பிறவி இல்லை என்பதாகும். அதுவே மோக்ஷம்.*

*இதன் தத்துவத்தை உணர்ந்துகொள்ளவேண்டும்.*



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

# L.A.JOSEPH

*(ஒய்வுபெற்ற அதிபர் - மாதகல் சென் ஜோசப் கல்லூரி, முன்னாள் ஆசிரியர் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, அளவெட்டி அருணோதயக் கல்லூரி)*

மாதகலைப் பிறப்பிடமாகவும் கல்கிஸையை வசிப்பிடமாகவும் கொண்ட L.A.ஜோசப் (25.08.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டயமன் ஜோசப் அவர்களின் அன்புக் கணவரும் ராஜ்குமார் (இலங்கை வங்கி மட்டக்களப்பு), சாந்திகுமார் (கனடா), ரோகினி, ராஜினி, அமிர்தகுமார், காலஞ்சென்ற ரஞ்சித்குமார், ரவீந்திரகுமார் (கனடா), ஜோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (28.08.2008) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு மஹிந்த மலர்ச்சாலையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கல்கிஸை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்கிசை,
கொழும்பு. (77509)

தகவல்:
L.A.J அமிர்தகுமார் (மகன்).

# நீங்காத நினைவில்
# பத்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 11 11 1939 — உதிர்வு 28 08 1998



## அமரர் பொன்னையா தியாகராசா

*(முன்னாள் சாலைப் பரிசோதகர்)*

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - இன்று
வானுயரும் தெய்வமாகிவிட்ட அப்பாவே!
அவனியதில் நாம் அனுதினமும் தேடுகின்றோம்
எங்கப்பா சென்றீர்கள் எம்மை விட்டு
அன்பு மொழி பேசி எம்மை அரவணைத்து
பண்புடனே எம்மை வளர்த்து
பார்புகழ பாதை காட்டி நின்றவரே
பாரினிலே நாம் தேட எங்கப்பா சென்றீர்கள்
எம்மை விட்டு
இவ்வுலகில் ஆயிரம் உறவுகள் எம்மைத் தேடி வந்தாலும்
அப்பா அது நீங்களாகி விடுமா?
உங்கள் புன்னகை முகமும்
நகைச்சுவை கலந்த பேச்சும் நானிலத்தில்
நாம் கேட்கும் காலம் தான் இனி வந்திடுமா?
நானிலத்தில் நாம் தேட எங்கப்பா சென்றீர்கள்
எம்மை விட்டு
இவ்வுலகில் நின்பிரிவால் ஆறுதலை நாம் இழந்தோம்
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து பத்து ஆண்டென்ன?
எத்தனை ஆண்டு ஆனாலும்
நாங்கள் உங்களை என்றுமே மறவோமப்பா
இதயத்தில் இறையாகி உள்ளத்தில் உயர்வாகி
நாம் வாழ்வதற்கு வழிகாட்டிய எம் அன்புத் தெய்வமே!
இருகரம் கூப்பி இறைவனை நாம் இறைஞ்சுகின்றோம்
எத்தனை ஜென்மம் நாம் எடுத்தாலும்
அத்தனை ஜென்மத்திலும்
நீங்களே எம் அப்பாவாக வேண்டுமென்று.

*உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

இல.49,பெந்தகோஸ் லேன்,
யாழ்ப்பாணம். (77511)



மக்கள் வங்கி சுன்னாக கிளையில் அதிகூடிய பணத்தொகையை சிசு உதான (மாணவர் மலர்ச்சி) கணக்கில் வைப்பிலிட்ட செல்வி K.அபிநயாவிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியை அவரது பாட்டன், பாட்டியிடம் பிரதி முகாமையாளர் திரு.சு.இராசமனோகரன் அவர்கள் அன்பளிப்புச் செய்வதையும் அருகில் உதவி முகாமையாளர்கள். உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.28

அராலி மேற்கு, கோட்டைக்காடு சித்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா கடந்த 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திரு விழாவும் நாளை மறுதினம் முற்பகல் 10.45 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.28

சாவகச்சேரி செருக்கல்பதி விநாயகர் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 06 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-207)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.28

மாதகல் உப்புத்தரவை ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மண்டலாபிஷேகம் 23 தினங்கள் இடம்பெறும். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.28

மீசாலை மேற்கு இலந்தைக்கூடல் கங்காணியார் கந்தசாமி ஆலய பெருந்திருவிழா கடந்த 21 ஆம் திகதி ஆரம்ப மாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-207)

## பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூர் தேர்த்திருவிழாவை முன்னிட்டு ஏழாலை ஆத்ம ஜோதி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நடத்தும் 56 ஆவது பாத யாத்திரை நாளை காலை 6 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் இருந்து புறப்படும். (202)

## ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், ஓக.28

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினர் நடத்தும் அத்வைதானந்த சுவாமி ஜெயந்தி விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

## இரு சபைகளிலும் 32 அமைச்சர்கள் இம்முறை 'அவுட்'

கொழும்பு, ஓக.28

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் முன்னாள் அமைச்சர்கள் 32 பேர் நடைபெற்று முடிந்த தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர். சப்ரகமுவ மாகாணத்தின் 17 அமைச்சர்களும் வடமத் திய மாகாணத்தின் 15 அமைச்சர்களும் புதிய மாகாணசபைக்குத் தெரிவு செய்யப்படவில்லை.

வடமத்திய மாகாணத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.பி.அபேசிங்க மொத்தம் 10 ஆயிரத்து 504 வாக்குகளுடன் 13ஆவது இடத்தைப் பெற்று தோல்வி [illegible] களிலும் ஜே.வி.பியின் 16 உறுப்பினர்கள் இம்முறை தமது இடங்களைப் பறிகொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

## கிழக்குப் பல்கலை சிங்கள மாணவரை தென்பகுதிக்கு மாற்ற அமைச்சர் முடிவு

கொழும்பு, ஓக. 28

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தற்போது காணப்படும் பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அங்கு கல்வி கற்கும் அனைத்து சிங்கள மாணவர்களையும் தென்பகுதி பல்கலைக்கழகங்களுக்கு உடனடியாக இடமாற்றம் செய்வதென உயர் கல்வியமைச்சர் விஸ்வ வர்ணபாலா தீர்மானித்துள்ளார்.

சமீபத்தில் கிழக்கு பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவனொருவன் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து உயர்கல்வி அமைச்சர் ஏனைய சிங்கள மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட முக்கிய அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்தே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்களின் பெற்றோரும் இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்தனர் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (சி)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் எலும்பு முறிவு, நெரிவு 'கிளினிக்'

யாழ்ப்பாணம், ஓக.28

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் எலும்பு முறிவு, நெரிவு 'கிளினிக்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி தொடக்கம் மாதத்தில் ஒரு வியாழக்கிழமையில் கிளினிக் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை எலும்பு முறிவு, நெரிவு வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி உமாபதி சிகிச்சைகளை வழங்கவுள்ளார்.

ஏற்கனவே இவ்வைத்தியசாலையில் கண்சிகிச்சை, சத்திர சிகிச்சை ஆகிய சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1014 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மேடம் **04 11 36 44**

**26-08-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 4048712 - 4064747

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 347,736 | 10/- | 3,477,360/- |
| 2 இலக்கங்கள் | 31,972 | 20/- | 639,440/- |
| 1 இல. + லக்கினம் | 31,707 | 30/- | 951,210/- |
| 2 இல. + லக்கினம் | 2,894 | 100/- | 289,400/- |
| 3 இலக்கங்கள் | 842 | 500/- | 421,000/- |
| 3 இல. + லக்கினம் | 88 | 5,000/- | 440,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,718,410/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 415,249 | | 7,218,410/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,776,850/-

தொடர் இல. 5926975 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 ஆகஸ்ட் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 4061351-6-41 |
| மொனராகலை | 4051358-5-05 |
| புத்தளம் | 4058954-3-81 |
| நுவரெலியா | 4061507-6-08 |
| மட்டக்களப்பு | 4054423-8-56 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்ஒசட்டியாவையும் அப்ஹாஷியாவையும் சுதந்திர நாடுகளாக ரஷ்யா அங்கீகாரம்



மொஸ்கோ, ஓக.28

ஜோர்ஜியாவிலிருந்து பிரிந்துள்ள தென் ஒசட்டியாவையும், அப்ஹாஷியாவையும் சுதந்திர நாடுகளாக, ரஷ்யா சம்பிரதாய பூர்வமாக அங்கீகரிக்கின்றது என, ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெட்வேடேவ், பி.பி.சி செய்தி நிறுவனத்திற்கு தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 17 வருடங்களாக, ஜோர்ஜியாவின் கட்டுக்கோப்பையும், ஒருமைப்பாட்டையும் ரஷ்யா பேணிவந்துள்ளது. அவை சீர்குலைந்து விடக்கூடாது என்பதில் அதீத ஆர்வமும், சிரத்தையும் காட்டிவந்துள்ளது. எனினும் இன்றைய நிலை மாறிவிட்டதென்றும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜோர்ஜியாவில் இம் மாதத்தில் தலை தூக்கியுள்ள வன்முறை ரஷ்யாவின் நன் நம்பிக்கையையும், ஆர்வத்தையும், அக்கறையையும் இல்லாதொழித்து விட்டன. முன்னைய நிலையை தலை கீழாக மாற்றி விட்டது. அதனால் ரஷ்யா இதர நாடுகளின் சமீபத்தியபோக்கை முன் மாதிரியாக ஏற்றுச் செயல்பட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது என்றும் அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

சேர்பியாவிலிருந்து ஒதுங்கிய கொசோவா விடயத்தில் இதர நாடுகள் மேற்கொண்ட அணுகு முறை என்ன? அதனை விழுந்தடித்து தனிநாடாக, சுதந்திர நாடாக அவை அங்கீகரித்தன. அதே நிலைப்பாட்டில், தென் ஒசட்டியாவையும், அப்ஹாஷியாவையும் அங்கீகரிக்க வேண்டிய கடப்பாடு ரஷ்யாவுக்கு உண்டு. இதனை ரஷ்யா உணர்கின்றது என்றுமவர் ரஷ்யாவின் நிலைப்பாட்டை விளக்கியுள்ளார்.

''இவ்விவகாரம் தொடர்பாக, ரஷ்யாவின் நிலைப்பாட்டை, ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெட்வே டேவ், ரஷ்ய அரச தொலைக்காட்சியில் தாம் நிகழ்த்திய உரையொன்றிலும் விளக்கியுள்ளார். இதையடுத்து மேற்கத்தேய நாடுகள் அதிர்ச்சியும், அதிருப்தியும் அடைந்துள்ளன.

''தென் ஒசட்டியாவையும், அப்ஹாஷியாவையையும் சுதந்திர நாடுகளாக அங்கீகரிக்க வேண்டுமென்ற ஆவணத்தில் நான் கைச்சாத்திட்டுள்ளேன். ஒசட்டியா மக்களினதும், அப்ஹாஷிய மக்களினதும் கருத்துச் சுதந்திரத்தையும் நான் கவனத்தில் கொண்டுள்ளேன்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## படகு விபத்தில் 25 பேர் பலி

ஸ்பெயினை அடைவதற்காக ஆபிரிக்கக் குடியேற்ற வாசிகளை ஏற்றிவந்த படகொன்று, தென் ஸ்பெயினின் அல்மோரியா மாகாண கரைப்பிராந்தியத்துக் கப்பால் விபத்துக்குள்ளாகியதில் 25 பேர் பலியாயினர். மற்றும் 25 பேர் மீட்கப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

மூழ்கிக் கொண்டிருந்த படகிலிருந்து 25 பேரும், மலாக்காவுக்கும், மெலிலாவுக்குமிடையில், கடல்ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த படகொன்றால் மீட்கப்பட்டனர். இவர்களில் ஐந்து பெண்களும், ஐந்து சிறார்களுமடங்குவர் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

வேலை வாய்ப்புக்களை எதிர்பார்த்து, ஐரோப்பாவை நாடும் ஆபிரிக்க சட்ட விரோத குடியேற்ற வாசிகள், ஐரோப்பாவிற்கான நுழைவாயிலாக ஸ்பெயினையே பயன்படுத்துகிறார்கள். ஸ்பெயினை வந்தடைந்ததும் இவர்கள், இங்கிருந்தே ஐரோப்பாவிற்குள் ஊடுருவுகிறார்கள் என ஓர் அதிகாரி கூறினார்.

## 'மிஸ் சிங்கப்பூர்' பட்டம் வென்ற உலகின் முதல் தமிழ்ப் பெண்

சென்னை, ஓக. 27

சிங்கப்பூரில் நடை பெற்ற அழகுராணிப் போட்டியில் சென்னையைப் பூர்வீகமாகக் கொண்ட காயத்திரி சண்முகம் என்ற தமிழ்ப் பெண்ணொருவர் 'மிஸ் சிங்கப்பூர்' பட்டத் தைத் தட்டிச் சென்றுள்ளார்.

இந்தப் பட்டத்தைப் பெறும் முதல் தமிழ்ப் பெண் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

சென்னையைப் பூர்வீகமாகக் கொண்ட காயத்திரி சிங்கப்பூரில் பாடசாலை மற்றும் கல்லூரிப் படிப்பை முடித்தவர். சிங்கப்பூர் ஏயார் லைன்ஸில் விமானப் பணிப்பெண்ணாகப் பணியாற்றியவர்.

இந்தப் பட்டத்தை வெல்லும் முதல் தமிழ்ப் பெண் என்பதில் எனக்கு மிகவும் பெருமையாகவுள்ளது. தற்பொது பிரபல விளம்பர நிறுவனங்களுக்கு மொடலாக நடித்து வருகிறேன். அதேபோல பல தொண்டு நிறுவனங்களின் சிறப்புத் தூதுவராக இருந்து பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறேன்.



சினிமாவில் நடிக்கப் பலரும் கேட்டு வருகிறார்கள். என் முதல் தெரிவு மொடலிங்தான். பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் நல்ல கதை அமைந்தால் சினிமாவில் நடிப்பேன். இனிச் சென்னையில் குடியேறத் திட்டமிட்டுள்ளேன் - என்றார்.

## ஈராக்கிய ஜலவலாஷ் நகரில்
## பொலிஸ் சேவைக்கு ஆள்திரட்டும் நிலையத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 25 பேர் பலி

ஈராக்கிய ஜலவலாஹ் நகரிலுள்ள பொலிஸ் சேவைக்கு ஆள்திரட்டும் நிலையத்தில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 25 பேர் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்தனர்-என பொலிஸ் வட்டாரம் நேற்று புதன்கிழமை தெரிவித்தது.

ஜலவலாஹ் நகர், தியலா மாகாணத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள பொலிஸ் சேவைக்கு ஆள்திரட்டும் நிலையத்துக்கெதிரில், நேர்முகப் பரீட்சைக்காக, ஆண்கள் வரிசைக்கிரமமாக நின்றனர். அனைவரும் இளைஞர்கள். அச்சமயத்தில் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அது விவரித்தது.

தற்கொலைக் குண்டுதாரியொருவர், தான் செலுத்திவந்த காரை, அங்கு நின்றுகொண் டிருந்தவர்கள் மீது மோதிய அதே வேளையில் குண்டையும் வெடிக்க வைத்துள்ளார். குண்டு வெடிப்பில் பலரின் உடல் அவயங்கள் சின்னா பின்னமாக சிதறி விட்டன என நேரில் கண்டவர்கள் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தனர்.

## நளினி வழக்குத் தொடர்பான ஆவணங்களை சுப்பிரமணியனுக்கு வழங்க நீதிமன்று மறுப்பு

சென்னை, ஓக. 28

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதியான நளினியின் வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்களை ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசாமிக்குக் கொடுக்க அரசுக்கு உத்தரவிட முடியாது - என்று உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று வேலூர் சிறையில் இருப்பவர் நளினி. இவர் தன்னை விடுதலை செய்யக்கோரி, உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார். இந்த வழக்கில் தன்னையும் சேர்க்கக் கோரி ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசாமி மனுத்தாக்கல் செய்தார். இதன் மீதான இறுதி விசாரணை 29ஆம் திகதி நடக்கவிருக்கிறது.

இந்நிலையில் சுப்பிரமணியசாமி நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றுக்கு வந்து, நீதிபதி நாகமுத்து முன்பு ஆஜரானார். அப்போது, ''நளினி வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகலை எனக்குத் தர அரசுக்கும், நளினியின் சட்டத்தரணிக்கும் உத்தரவிட வேண்டும்'' - என்றார்.

இதைக் கேட்ட நீதிபதி, 'ஆவணங்களின் நகலை உங்களுக்குத்தர உத்தரவிட முடியாது. உங்களிடம் உள்ள ஆவணங்களை வைத்து நீதிமன்றத்தில் உங்கள் தரப்பு வாதத்தை எடுத்து வைக்கலாம்'' - என்று உத்தரவிட்டார்.

## 83 ஓட்டங்களுடன் சுருண்டது தென்னாபிரிக்கா 10 விக்கெட்டுகளால் இங்கிலாந்து அணி வெற்றி!

நாட்டிங்காம், ஓக.28

இங்கிலாந்துக்கு எதிரான 2 ஆவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 83 ஓட்டங்களில் சுருண்டு படுதோல்வியைத் தழுவியது.

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து இடையிலான 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி நாட்டிங்காமில் நேற்றுமுன்தினம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் நிலைகுலைந்தது. சீட்டுக்கட்டுகள் போல் விக்கெட்டுகள் மளமளவெனச் சரிந்தன. 23 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த தென்னாபிரிக்கா 83 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தது. கிப்ஸ் (10 ஓட்டம்), பவுச்சர் (10 ஓட்டம்), நெல் (13 ஓட்டம்) ஆகியோர் மட்டுமே இரட்டை இலக்கை எட்டியவர்கள் ஆவர்.

இங்கிலாந்து தரப்பில் ஸ்டுவட் பிராட் 5 விக்கெட்டுகளும், பிளின்ரொப் 3 விக்கெட்டுகளும்,ஹார்மிசன் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினார்கள். விக்கெட் காப்பாளர் மேத் பிரையர் மட்டும் 6 பிடிகளை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்காவின் 2 ஆவது குறைந்த பட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். இதற்கு முன்பாக 1993 ஆம் ஆண்டு சிட்னியில் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் 69 ஓட்டங்களில் அந்த அணி ஆட்டமிழந்தது.

அடுத்து ஆடிய இங்கிலாந்து அணி 14.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 85 ஓட்டங்கள் எடுத்து 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இயன் பெல் 28 ஓட்டங்களுடனும், மேத் பிரையர் 45 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. 3 ஆவது ஒருநாள் போட்டி நாளை நடக்கிறது.

## மருத்துவ மாதர்களுக்கான மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வு

யாழ். மாவட்டத்தில் சுகாதார வைத்திய அதி காரிப் பிரிவின் கீழ்ப் பணியாற்றும் 90 குடும்ப நல மருத்துவ மாதர்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வு நாளை மு.ப. 10 மணிக்கு பண்ணை சுகாதாரக் கிராமத்தில் இடம் பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி எஸ். குமார வேற்பிள்ளை கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக யுனிசெவ் அமைப்பின் மாவட்டப் பிரதிநிதி டாக்டர் டயான், ஐ.ஒ.எம். நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பிரதிநிதி செல்வி எம்.என்.ஏ.எஸ். சாமிநாதன் ஆகியோர் கலந்துகொள்வர்.

யாழ். மாவட்டத்தின் மருந்துக் களஞ் சியத்தில் யுனிசெவ் நிறுவனத்தின் உதவி யுடன் அமைக்கப்பட்ட மத்திய குளிரூட்டி நிலையமும் ஐ.ஒ.எம். நிறுவனத்தின் உதவியுடன் [illegible] சிகிச்சை நிலையத்தில் அமைக் [illegible] ஆரம்பித் துவைக்கப்படவுள்ளன. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது தலைமை அலுவலகத்தில் திட்ட அலுவலராக பணியாற்றும் T.T.மயூரன் அவர்களின் பாசமிகு தந்தை

**கந்தசாமி திருநாவுக்கரசு**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

STAFFS OF JAFFNA & COLOMBO CHA
CONSORTIUM OF HUMANITARIAN AGENCIES.

## வலிகாமம் மேற்கு பிரதேச அபிவிருத்தி தொடர்பான செயலமர்வு

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு.தி.இராசநாயகம், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு.பீ.ஜோண்சன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம், திருமதி மதுமதி வசந்தகுமார், பிராந்திய ஆணையாளர், யாழ்ப்பாணம், திருமதி ப.சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளும் வலி.மேற்குப் பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான செயலமர்வு ஒன்று நாளை(29.08.2008) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி. மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் இச் செயலமர்வில் வலி.மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த சனசமூக நிலையங்களின் சமாச உறுப்பினர்களையும், சனசமூக நிலைய உறுப்பினர்களையும், சகல முன்பள்ளிகளின் ஆசிரியைர்களையும், அபிவிருத்திச் சபைகளின் பிரதிநிதிகளையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வலி.மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் காணி உத்தியோகத்தராக (LAND OFFICER) கடமையாற்றும் **நாகமுத்து நமசிவாயம்** அவர்களின் அன்புத் தாய்

**நாகமுத்து முத்தாச்சி**

இறையடி எய்தியதையிட்டு, அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

வலி.கிழக்கு பிரதேச செயலகம்,
கோப்பாய்.

பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்.

## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு வள்ளிநாயகி



சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் தொட்டிலடி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு வள்ளிநாயகி 26.08.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் முருகேசு (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் ,வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம்) அவர்களின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் (மலேயன் பெஞ்சனியர்)-தையல்நாயகி தம்பதியரின் மகளும் திருச்செல்வி (சுவிஸ்), சிறிகரன், தயாகரன் (ஆசிரியர், வவுனியா), புஷ்பலீலா ஆகியோரின் அன்புத் தாயும் கமலநாதன் (சுவிஸ்), இராசலட்சுமி, புஷ்பராணி, நியூட்டன் ஜெயக்குமார் (நிமல்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆதர்ஸ், பிரதீஸ், விபுசா, பவிசா, துவாரகா, அபினா, அபிஷேக், அபிநாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (28.08.2008) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொட்டிலடி,
சங்கானை.

(77516)

தகவல்:
மு.சிறிகரன் (மகன் - A.M.S.)

# ஐந்தாவது ஆட்டம் முடியும் முன்னரே தொடரைக் கைப்பற்றியது இந்தியா அணி!

கொழும்பு, ஓக. 28

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் நேற்று ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் இடம்பெற்ற நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி 46 ஓட்டங்களால் வெற்றிபெற்றதன் மூலம் அது தொடரை 3:1 என்ற விகிதத்தில் தனதாக்கிக் கொண்டுள்ளது.

இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய கௌதம் கம்பீர் மற்றும் ஹோலி ஆகியோர் தமது இணைப்பாட்டத்தை 44 ஓட்டங்கள் வரை கொண்டுவந்தபோது கம்பீர் 17 ஓட்டங்களுடன் துஷ்ஷாராவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த யுவராஜ்சிங் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 8 1 ஆக இருந்தவேளை ஹோலியும் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்து 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் வந்த சுரேஸ் ரெய் னாவும் அணித்தலைவர் டோனியும் நிதானமாகவும், இடைக் கிடையே அதிரடியாகவும் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை ஓரளவு பலப் படுத்தினர்.

இருவரும் இணைப்பாட்டமாக 143 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். ரெய்னா 76 ஓட்டங்களுடனும், டோனி 71 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து செல்ல பின்வரிசைத் துடுப்பாட்டவீரர்கள் எவரும் நிண்டுபிடிக்காமல் மளமளவென்று வெளியேறினார்கள். இறுதியில் இந்திய அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 258 ஓட்டங்களைப்பெற்றிருந்தது.

இலங்கை அணியின் பந்து வீச்சில் துஷ்ஷாரா 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

இந்த ஆட்டத்தில் கட்டாயம் வெல்ல வேண்டும் என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கைஅணி 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 212 ஓட்டங்களை மாத்திரமே எடுத்திருந்தது.

சனத் ஜெயசூரியா 8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 52 பந்துகளில் 60 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அத்துடன், பந்துவீச்சில் பிரகாசித்த துஷ்ஷாரா துடுப்பாட்டத்திலும் வெளுத்து வாங்கினார். அவர் 29 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 40 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்றிருந்தார். கப்புக்கெதர 30 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இந்திய அணியின் பந்துவீச்சைப் பொறுத்தவரையில் ஹர்பஜன்சிங் 3 விக்கெட்டுக்களையும், பட்டேல் மற்றும் யுவராஜ் சிங் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும் விழ்த்தியிருந்தனர்.

## ஆலங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருமெடுப்பிலான முன்நகர்வினை மேற்கொண்டனர்.

இம்முன்நகர்வுக்கு எதிராக பிற்பகல் 4 மணிவரை நீடித்த விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலில் படையினரின் முன்நகர்வு முறியடிக்கப்பட்டது என்று புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

படைத்தரப்பைச் சேர்ந்தவரின் சடலம் ஒன்றும் படைப் பொருள்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை -

ஆலங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் 17 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். இரண்டு படையினர் கொல்லப்பட்டனர்; 16 படையினர் காயமடைந்தனர் - என்று பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் நேற்றிரவு அறிவித்தது. (அ-1)

## இன்றும் ஞாயிறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊரடங்கு நீக்கப்படும் என்று பலாலி ஊடகப் பிரிவு நேற்றிரவு தெரிவித்தது.

குறிப்பிட்ட இரண்டு நாள்களிலும் ஊரடங்கை நீக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஏற்ப ஊரடங்கு நீக்கப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வழமைபோன்று ஊரடங்கு இரவு 9 மணி முதல் அதிகாலை 4.30 மணிவரை நடைமுறையில் இருக்கும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## திருமலைக்கான

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்ளை யாழ்.ரயில் நிலையப் பகுதியில் சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு திருகோணமலை கடற்படைத்தளம்மீது விடுதலைப் புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தியிருந்தன.

இதன் காரணமாக கப்பல் சேவை இடம்பெறுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் நிலவியது. அது குறித்து சிவில் நிர்வாக அலுவலகத்தில் வினவியபோது பயணிகள் கப்பல்சேவையில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் அது வழமைப்பிரகாரம் நடைபெறும் என்றும் சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது. (அ-1)

## வன்னி அகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரந்தர வதிவிடப் பிரதிநிதி நீல் புஹூனே ஐ.ஆர்.ஐ.என் செய்திச் சேவையிடம் நேற்று விவரி[illegible]ார்.

"[illegible]ருக்கான உதவித் தேவைகளில் [illegible]த்தை நிதி உதவி வழங்கும் நாடு[illegible] தந்துதவ முன்வந்திருந்தன. ஆனால் [illegible]லும் நிதி தேவைப்படும் நிலை உருவாகி[illegible]புள்ளது.அதன் பொருட்டு நிதி உதவி [illegible]ங்கும் நாடுகள் ஈடுசெய்ய முன்வருமா என்பதே எமது கவலையாக உள்ளது"என்றும் நீல் புஹூனே மேலும் தெரிவித்தார்.

"இந்த வருடத்தில் உலகளாவிய ரீதியில் மனிதாபிமான உதவிகளுக்கான நிதித்தேவை அதிகமாக காணப்பட்டதால் நிதி உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கான உதவு தொகைகளை மட்டுப்படுத்தி உள்ளன. அது மட்டுமன்றி இந்த வருட அரை ஆண்டுக்கு மேற்பட்ட காலத்தில் இலங்கைக்குதேவையான உதவியின் முக்கியத்தை கவனத்தில் எடுக்காமலும் இருந்துள்ளன" என்றும் தாம் நேற்று விடுத்த அவசர நிதி கோரிக்கை குறித்துப் பிரஸ்தாபிக்கையில் புஹூனே சொன்னார். (அ)

## நாச்சிக்குடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் - 58 ஆவது டிவிஷன் படையணியின் முன்னேற்ற நடவடிக்கைக்கு உதவும் வகையிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் படைத்தரப்பில் கூறப்பட்டது. எனினும் விமானங்கள் வீசிய குண்டுகள் பொதுமக்களின் குடிமனைகள் மீதே வீழ்ந்து வெடித்தன என்று வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

## துணுக்காயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணுக்காய் புத்துவெட்டுவானில் நேற்று (புதன்கிழமை) காலை தமது வீட்டுப் பொருள்களை ஏற்றச் சென்றவர்களின் டிரக்டர் மீதே ஆழ ஊடுருவும் அணியினர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதில் டிராக்டர் சாரதியான புத்துவெட்டுவானைச் சேர்ந்த தில்லையம்பலம் ஞானச்சந்திரன் (வயது - 32) என்பவர் கொல்லப்பட்டார். மூவர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. ஐயன் குளத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை நாகரத்தினம் (வயது - 48), புத்துவெட்டுவானைச்சேர்ந்த தேவராசா அல்லது மைந்தன் (வயது - 24) மற்றும் சின்னத்தம்பி நடராசா (வயது - 48) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்களின் குடும்பங்கள் இடம் பெயர்ந்து கிளிநொச்சி கனகாம்பிக்கைக்குளம் பாடசாலையில் அகதிகளாக தங்கியுள்ளன.

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியது தெரிந்ததே.

இந்த விமானத் தாக்குதலினால் அதிர்ச்சி அடைந்திருக்கும் பாதுகாப்புத் தரப்பு, அதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

தாக்குதல் நடந்தவுடன்,தமது தரப்பில் நால்வர் மட்டுமே காயமடைந்தனர் என அறிவித்த படைத்தரப்பு, காயமடைந்தோரின் எண்ணிக்கை 10 என்று நேற்றுக் காலையில் தெரிவித்தது. பின்னர் 18 பேர் காயமடைந்தனர் என்று நேற்று பிற்பகல் அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டது.

எனினும் புலிகளின் குண்டுவீச்சில் மொத்தம் 6 படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்து விட்டனர் என்றும் 24 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் எனவும் சுயாதீனத் தகவல்கள் நேற்று மாலை தெரிவித்தன. கடற்படையினரின் சொத்துக்கள் பலவும் இத்தாக்குத லினால் கடுமையாகச் சேதமடைந்து விட்டன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (சி)

## மன்னார் ஆயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினால் அனுப்பி வைக்கப்பட்ட கூரை விரிப்புக்கள் ஓமந்தை சோதனைச்சாவடியில் படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப்பகுதியில் இடம்பெயர்ந்து மர நிழல்களின் கீழ் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான கூரை விரிப்புக்களை மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் மன்னார், வவுனியா படை உயர் அதிகாரிகளின் அனுமதியுடன் வன்னிக்கு அனுப்பிவைத்திருந்தார். இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட கூரை விரிப்புக்கள் படையினரால் ஓமந்தைச்சோதனைச்சாவடி ஊடாக கொண்டுசெல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## "ராடரில்"...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படை மற்றும் விமானப்படை அதிகாரிகளைக் கொண்ட இரு குழுக்கள் தனித்தனியாக நேற்று ஆரம்பகட்ட விசாரணைகளை நடத்தின.

விடுதலைப் புலிகளின் விமானம் வருவதற்கு முன்னதாகவே - மூன்று நிமிடங்களுக்கு முன்னரே - "ராடர்" கருவிகளில் அவற்றின் நடமாட்டம் தென்பட்டதும் கடற்படையினர் வானத்தை நோக்கி தாக்குதலை மேற்கொண்டனர்.

எனினும் விமானம் வந்து தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றுள்ளது.

விடுதலைப் புலிகளின் விமானம் எவ்வாறு வான்பரப்பில் நுழைந்தது? நிலத்தில் இருந்து கடும் தாக்குதல் நடத்தப்பட்ட போதிலும் தாக்குதல் நடத்திவிட்டு எவ்வாறு தப்பிச் சென்றது? என்பன தொடர்பாக இரு குழுக்களும் விரிவாக நேற்று ஆராய்ந்துள்ளன.

இதேவேளை -

இத்தாக்குதலில் காயமடைந்த ஏழு கடற்படையினர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரின் நிலை ஆபத்தான நிலையில் உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

## கடற்படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுகள் படைத்தளத்தை நோக்கி வீசப்பட்டுள்ளன. அவ்விரு குண்டுகளில் ஒன்று குறித்த தளத்தின் ஒதுக்குப்புற மொன்றில் வீழ்ந்து வெடித்தமையினால் 10கடற்படையினர் காயமடைந்தனர்.

புதன்கிழமை இரவு 9.15 மணியளவில் விடுதலைப் புலிகளின் இலகு ரக விமானமொன்று இந்த குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது. அதன் போது குறித்த விமானத்தில் இருந்து இரு குண்டுகள் படைத்தளத்தை நோக்கி வீசப்பட்டன. அதில் ஒன்று படைத்தளத்திற்கு அருகிலான காட்டுப் பகுதியில் வீழ்ந்துள்ள போதிலும் வெடிக்கவில்லை.

மற்றைய குண்டு கடற்படைத்தளத் தின் ஒதுக்குப்புறத்தில் வீழ்ந்து வெடித் துள்ளது. இக் குண்டு வெடித்ததில் படைத் தளத்திற்கு எவ்வித சேதங்களும் ஏற்பட வில்லை. அதனால் 10கடற்படை வீரர்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்த கடற்படை வீரர்கள் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் விமானம் ஒன்று கடற்படைத் தளத்தை நோக்கி வருவதாக கிடைத்த தகவலை அடுத்து அவ் விமானத்தை நோக்கி கடற்படையினர் கடும் துப் பாக்கிப் பிரயோகத்தையும் நடத்தினர். விமான ஏவுகணை தாக்குதலை நடத்தினர் - என்று கூறினார்.

A/L எடுத்தவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
இலகு தமிழ் விளக்கத்துடன்...
SPOKEN ENGLISH WITH GRAMMAR
பருத்தித்துறையில் - P.K.Lane
OXFORD ENGLISH ACADEMY
01.09.2008 (Monday) 10.00 am
நெல்லியடியில் - MATHS CENTRE இல்
01.09.2008 (Monday)- 09.00 am
By Mr.B.Jothy
(அனுமதிக்கு முந்துங்கள்)

2008 வெற்றித்தேர்வு விற்பனைக்கு.
இலங்கை முழுவதும் பல ஆயிரக்கணக்கான மாணவர்களைச் சந்தித்த
திருமலை எஸ் கணேசலிங்கம் அவர்களின்
இறுதிப் பரீட்சைக்கான அதேமாதிரி வினாக்களை அள்ளித்தந்த!!
யாழ்.நல்லூர்.பூபாலசிங்கம் புத்தகசாலைமட்டும்.
தரம்: 4ற்கான வெற்றித்தேர்வு-8. பாடசாலை
ஆரம்பமாக உங்கள் கைகளில் கிடைக்கும்.
15வரை அது தொடரும்.விடை.இலவசகையேடு
தபாலில் பெறவிரும்புவோர் உடன்தொடர்பு கொள்க.
வெற்றித்தேர்வு மாவட்ட இணைப்பாளர்.
392. நாவலர் வீதி. அரியாலை.யாழ்ப்பாணம்.
T.P:0.12229016. 0773126807

PERSONAL CLASSES (ENGLISH)
பிரத்தியேக வகுப்புகள் (ஆங்கிலம்)
அனுபவம்மிக்க ஆசிரியரிடம் ஆங்கிலம் கற்க விரும்பும்
மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.)
T.P:- 0776589443

புகைப்படச் சுருள்கள் அனைத்தும் உடனுக்குடன் பிரதியாக்கம் செய்து பெற்றுக் கொள்ளுங்கள்

ஸ்ருடியோ அன்ட் டிஜிற்றல் கலர் லாப்
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.